மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்



***Courtesy :*** unicef india Calender 2013

**6 – 24 மாதம் வரை அடிக்கடி அளிக்கப்படும் சரியான அளவு மற்றும் தரமான உணவு – அதிகபட்ச வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும்**



Krinna Shah

எனக்குக் கல்வி தேவை. நான் யாருக்கும் பயப்படவில்லை.

***Courtesy***: HAQ: Centre for Child Rights – Calender 2013

# வீட்டுக்குள்ளேயே பயங்கரம்

**"குடும்பத்தைச் சேர்ந்தவர்களே வன்புணர்ச்சியாளர்களாக மாறினால் பெண் குழந்தைகள் யாரைத்தான் நம்புவார்கள்?"**

**– சபரிநாத் பாஹுலேயன்**

*பள்ளி ஆசிரியர் யாராவது தனது மாணவக் குழந்தைகளுடன் உட்கார்ந்து மனம் விட்டு அவர்கள் சொல்வதை இதயப்பூர்வமாக கேட்டதாக கேள்விப்பட்டதுண்டா? தங்களால் புரிந்துகொள்ள முடியாத நிகழ்வுகளைச் சந்திக்கிறபோது குழந்தைகள் தங்களுடைய பெற்றோரின் உதவியை நாடுவார்கள். ஆனால், குழப்பத்திற்குக் காரணமே பெற்றோர்தான் என்கிறபோது குழந்தைகள் மவுனமாகிவிடுகிறார்கள்.*

*ஆனால், உணர்வுப்பூர்வமாக ஒரு ஆசிரியர் அமைந்துவிட்டால் குழந்தையின் வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படும். ஒரு ஆசிரியர் பாடப்புத்தகங்களின் அட்டைகளுக்கு வெளியே உள்ள விஷயங்களிலும் கவனம் செலுத்துவாரானால் அவர் மிகச் சிறந்த மனிதராகவும் உருவாகிறார். அக்கறையுள்ள ஆசிரியர்களைப் போல வேறு யாராலும் குழந்தையின் மனதைப் புரிந்துகொள்ள முடியாது.*

*ஒரு சின்னஞ்சிறு பெண் அவளுடைய தகப்பன், சகோதரன், மாமன்மார்களால் பாலியல் ரீதியாக முறை தவறிப் பயன்படுத்தப்பட்ட உண்மைக் கதை இது. அவளை மீட்பதற்கு முனைந்தவர் அவளுடைய தாய் அல்ல, அவளது வகுப்பு ஆசிரியர்தான். கேரளத்தின் கண்ணூர் மாவட்டத்தில், சம்பவம் நடைபெற்ற அண்டலூர் கிராமத்திற்குச் சென்று இதை எழுதுகிறார் செய்தியாளர்* ***சபரிநாத் பாஹுலேயன்.***

பள்ளி நேரம் முடிந்துவிட்டது. வகுப்பாசிரியரான அந்தப் பெண் வெளியேறுவதற்கான கடைசி கட்டப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார். அப்போது அவரது ஒரு மாணவி மூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதை அவர் பார்த்தார். சிறுமியின் பக்கத்தில் உட்கார்ந்த அவர், ஏன் இன்னும் வீட்டுக்குப் போகவில்லை என்று கேட்டார். கதறி அழுத அந்தச் சிறுமி தன்னை வீட்டிற்கு அனுப்ப வேண்டாம் என்று கெஞ்சினார். நீண்ட நேரம் ஆறுதல் கூறிய பிறகு அந்தச் சிறுமி கூறிய விஷயம் பயங்கரமானதாக இருந்தது.

### கேரளம்: பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலம்

- 2011ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வன்புணர்ச்சி வழக்குகள் **1132**. பாதிக்கப்பட்டோர்களில் **432** பேர் குறைந்த வயதுடையவர்கள்.
- 2012ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் வரையில் பதிவு செய்யப்பட்ட வன்புணர்ச்சி வழக்குகள் **493**. பாதிக்கப்பட்டவர்களில் **286** பேர் குழந்தைகள்

*(ஆதாரம்: கேரள குற்றப்பதிவுகள் துறை)*

குடும்பத்தில் அவள்தான் இளையவள். வெளியே சென்று சம்பாதிக்கிறவர் அம்மா மட்டும்தான். குடிகாரனாகிய தனது தந்தையும், 15 வயதுள்ள அண்ணனும், இரண்டு மாமன்களும், இரண்டு ஆண்டுகளாக அவளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி வந்திருக்கிறார்கள். இதைக் கேட்டு கண்ணீர் வடித்த ஆசிரியை உடனடியாக அதை தலைமையாசிரியரின் கவனத்திற்குக் கொண்டுச் சென்றார். அவர் உடனடியாகப் பிரச்சனையை காவல்துறைக்கும் ஊராட்சித் தலைவருக்கும் தெரிவித்தார்.

பாலியல் வன்கொடுமை நடந்தது உண்மைதான் என்று, மருத்துவ சோதனைகள் உறுதிப்படுத்தின. மறுநாளே சிறுமியின் தகப்பனும் மாமன்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். அவளுடைய அண்ணன் தலைசேரியில் உள்ள சிறார் இல்லத்திற்கு அனுப்பப்பட்டான். சைல்டுலைன் அமைப்பின் ஊழியர்கள் முன்னிலையில் சிறுமியின் வாக்குமூலத்தைக் காவலர்கள் பதிவு செய்தார்கள். "அவள் பீதியிலும் குழப்பத்திலும் மூழ்கியிருந்தாள். தனது வாழ்க்கையையே முடித்துக்கொள்ள எண்ணியிருந்தாள்," என்றார் ஒரு சைல்டுலைன் தொண்டர்.

அம்மா வேலைக்குப் போன பிறகு தந்தையும் அண்ணனும் தன்னை கடந்த இரண்டு ஆண்டுகளில் பலமுறை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கியதாக அந்தச் சிறுமி சைல்டுலைன் ஆலோசகரிடம் கூறினாள். வீட்டிற்குப் பக்கத்திலேயே குடியிருப்பவர்களான மாமன்களும் அவ்வாறு நடந்துகொண்டதாக அவள் தெரிவித்தாள். இது அம்மாவுக்கோ

மற்ற உறவினர்களுக்கோ தெரியாது. அவளுக்கு ஒரு அக்காள் இருந்தாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவள் தற்கொலை செய்துகொண்டாள். அதற்குக் காரணமும் வீட்டில் நடந்த வன்புணர்ச்சிதான்.

கேரள மாநில மகளிர் ஆணையம் அந்தச் சிறுமியை மீட்கும் பணியில் விரைந்து ஈடுபட்டது. இரண்டு ஆண்டுகளாக இந்தக் கொடுமை நடந்து வந்திருந்தாலும் சென்ற ஆண்டு நவம்பரில்தான் இது தெரியவந்தது என்பது சோகமானது என்றார் மகளிர் ஆணையத் தலைவர் கே.சி. ரோசாகுட்டி. ‘‘சிறுமியின் தாயார் கூட மகளுக்கு ஆதரவாக வரவில்லை. அவரைக் குற்றம் சொல்ல முடியாது. ஏனென்றால் அவர்கள் ஏழைகள். அந்தப் பெண் தனது கணவனை நினைத்து பயந்திருக்கக் கூடும். 8ம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுமி தனது வாக்குமூலத்தை விலக்கிக் கொள்ளுமாறு குடும்பத்தினரும் மற்றவர்களும் பெரிதும் நிர்ப்பந்தித்தார்கள்,’’ என்றார் ரோசாகுட்டி.

அந்தச் சிறுமியின் அக்காள் மரணமடைந்தது குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும் என்றார் அவர், ‘‘ வயதுக்கு வராத இரண்டு சகோதரிகள் அவர்களுடைய குடும்பத்தினராலேயே பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டது அதிர்ச்சிகரமான விஷயம். மூத்த பெண் தற்கொலை செய்து கொண்டாள் என்று காவல்துறை சொல்கிறது. அந்த நேரத்தில் முறையான விசாரணை எதுவும் நடத்தப்படாதது ஏன் என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டும்,’’ என்று ரோசாகுட்டி கூறினார்.

காவல்துறை கண்காணிப்பாளர் ராகுல் ஆர். நாயர் இது குறித்து சொல்லும்போது, ‘‘சம்பவத்தின் உண்மைத்தன்மை குறித்து மேற்கொண்டு விசாரணை நடத்தினால் தான் தெரிய வரும். இப்போதைக்கு எங்களுடைய விசாரணை தற்போதைய வழக்கு தொடர்பாக மட்டுமே நடந்து கொண்டிருக்கிறது,’’ என்று கூறினார். தனது சகோதரியின் மரணம் குறித்து இந்தச் சிறுமி கூறுவதற்கான நம்பகமான ஆதாரம் இல்லை என்றும் அவர் கூறினார்.

குழந்தைகள் நலக் குழுவால் நடத்தப்படும் ஒரு இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமி, தற்போது தலசேரியில் உள்ள மகிளா மந்திர் இல்லத்தில் இருக்கிறாள். விரைவில், கோழிக்கோடு நகரில் உள்ள இந்த மையத்தின் இல்லத்திற்கு மாற்றப்பட இருக்கிறாள். அங்கு ஒரு புதிய பள்ளியில் இவளைச் சேர்ப்பதற்கான முயற்சியும் நடந்து வருகின்றன. சிறுமியின் தாயார் பெரும் மன உளைச்சலில் இருக்கிறார். ‘‘நாங்கள் ஏழைகள். என் கணவருக்கு வேலை இல்லை. நான் ஒரு தற்காலிகத் தொழிலாளிதான். காலையில் சீக்கிரமே வீட்டிலிருந்து வேலைக்குப் போய் இரவில்தான் வீடு திரும்புவேன். என் மகளுக்கு ஏற்பட்ட துயரம் பற்றி எனக்குத் தெரிய வரவில்லை. அவள் என்னிடம் எதையுமே சொன்னதில்லை,’’ என்று அவர் அழுதுகொண்டே கூறினார். ‘‘யாருக்குமே எங்களை அடையாளம் தெரியாத வேறு ஒரு ஊருக்கு குழந்தைகளோடு போய்விடலாம் என்று நினைக்கிறேன்,’’ என்றும் அவர் கூறினார்.

இவர்களது கிராமத்திற்குச் சென்று விசாரித்தபோது சிறுமியின் தகப்பனுக்கு ஊரில் எந்த மரியாதையும் இல்லை என்பது தெரியவந்தது. விஷமத்தனமான ஆள் என்று எல்லோரும் அவரைப்பற்றிச் சொல்கிறார்கள். ஆனால், இந்த அளவிற்கு தன் மகளிடமே கொடுமையாக நடந்துகொள்வார் என்று யாரும் நினைக்கவில்லை.

இப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தாயார்களோ வேறு உறவினர்களோ பிரச்சனையைக் கொண்டுவராமல், ஆசிரியர்களின் தலையீட்டால் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பல வழக்குகளில் இதுவும் ஒன்று என்று தலசேரி குழந்தைகள் நலக் குழுவின் ஒரு அதிகாரி தெரிவித்தார். சில நேரங்களில் இத்தகைய அத்துமீறல் சம்பவங்கள் குழந்தைகளின் தாயார்களுக்குத் தெரிந்தே நடக்கின்றன. ஆனால், குடும்ப கவுரவத்தைப் பாதுகாப்பது என்ற பெயரால் அந்தத் தாயார்கள் மவுனமாக இருக்கிறார்கள். சிறுமியின் ஒரு மாமன் பல நாட்களாக தலைமறைவாக இருந்தான். குற்றம்சாட்டப்பட்டிருப்பவர்களில் நான்காவது மற்றும் கடைசி நபரான அந்த மாமனை தலசேரி ரயில் நிலையத்தில் 2012 டிசம்பர் 11 அன்று கைது செய்ததாக 'தி வீக்' பத்திரிகையின் செய்தியாளரிடம் காவல்துறை கண்காணிப்பாளர் நாயர் தெரிவித்தார். சில ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு விபத்தில் தனது இரண்டு கால்களையும் இழந்தவன் அந்த மாமன். ‘‘கண்ணூர் சிறைக்கு அவனை கொண்டு செல்லும் வழியில் அவன் திடீரென மயங்கி விழுந்தான். மாவட்ட மருத்துவமனைக்கு நாங்கள் அவனைக் கொண்டுசெல்வதற்கு முன் அவன் இறந்துவிட்டான்,’’ என்றும் நாயர் கூறினார்.

குற்றம் சாட்டப்பட்டோரில் எஞ்சி இருப்பவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 376 (வன்புணர்ச்சி), 3,4, (உடலுறவு பாலியல் தாக்குதல்), 7,8, (பாலியல் வன்முறை) ஆகிய பிரிவுகளின் கீழும், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கான 2012ம் ஆண்டுச் சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஆதாரம்: THE WEEK • FEBRUARY 3, 2013**

# பிரிவு 376

# பாதிக்கப்பட்டவருக்கு மரியாதை

– ஸ்வாஹதா யதாவார்

**'தி வீக்' பிரச்சாரம்: வன்புணர்ச்சிக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளிலும் காவல் நிலையங்களிலும் முறையாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தும் தெளிவான நடைமுறைகள் உருவாக்கப்படுவது அவசியம்.**

*பாலியல் தாக்குதலுக்கு உள்ளாகிற ஒருவரை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து உலக சுகாதார நிறுவனம் விரிவான விதிமுறைகளைப் பரிந்துரைத்துள்ளது. தாக்கப்பட்டவரின் மனநிலை, உடல்நிலை இரண்டையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு மருத்துவ ஊழியர்கள், தடயவியல் வல்லுநர்கள் ஆகியோருக்கும் விசாரணை அமைப்புகளுக்கும் நடைமுறை விதிகளை இந்த நிறுவனம் பரிந்துரைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர் பரிசோதனை செய்யப்படுவது முதல் ஆதாரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவது வரையில், அதேபோல் பாதிக்கப்பட்டவர் எத்தகைய சூழலில் விசாரிக்கப்பட வேண்டும் என்பது வரையில் ஒவ்வொரு நடவடிக்கைக்குமான தெளிவான நடைமுறைகளை இந்த நிறுவனம் வகுத்துள்ளது.*


*ஒரு கெடு வாய்ப்பாக இந்தியாவில் அத்தகைய நடைமுறை விதிகள் எதுவும் இல்லை. மருத்துவமனைகள், தடயவியல் சோதனைக் கூடங்கள், காவல் நிலையங்கள் ஆகிய இடங்களில் பின்பற்றப்படுகிற ஒரே சீரான நடைமுறை என்பதும் இல்லை. இந்த தனிப்பட்ட, பன்முக அணுகுமுறைக் கொண்ட பணியைச் செய்வதற்காக என மருத்துவ ஊழியர்களுக்கு எவ்வித முறைப்படியான பயிற்சியும் அளிக்கப்படுவதில்லை. பாதிக்கப்பட்டவர் வயதுக்கு வராத சிறுமியாக இருந்தாலும் கூட மருத்துவ சோதனைகள் நடத்துமாறு பேறுகால மருத்துவர்கள் பணிக்கப்படுகிறார்கள். பிரசவ அறைகள் பரிசோதனை அறைகளாக மாற்றப்படுகின்றன. மும்பையில் பாதிக்கப்பட்ட ஒரு சிறுமி புகார் செய்வதற்காக காவல் நிலையம் சென்றபோது அங்கு அவள் எப்படி நடத்தப்பட்டாள் என்பதை இங்கு பார்ப்போம். இரவு முழுவதும் அந்தச் சிறுமி காவல் நிலையத்திலேயே சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருந்ததை 'தி வீக்' செய்தியாளர்* ***ஸ்வாஹதா யதாவா*** *கண்டுபிடித்தார்.*

சாய்ரா கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து சரியாகத் தூங்குவதில்லை. தன் மனதை அமைதிப்படுத்திக் கொள்வதற்காக குரான் எடுத்துப் படிக்கிறார். சரியாகச் சாப்பிடுவதில்லை. அவர் சந்தித்த ஒரு இரவுப் பொழுதின் அனுபவம் அவரது நினைவில் வந்து அச்சுறுத்திக்கொண்டே இருக்கிறது. மீண்டும் அதேபோன்ற தாக்குதல் நடக்கக்கூடும் என்ற அச்சமும் அவரை வாட்டுகிறது. அவருடைய வீட்டில் தங்கிக்கொள்ள அனுமதி கேட்டு வந்த உறவுக்காரன் ஒருவன், அன்று இரவு தனது சகோதரர்களின் உதவியுடன் அந்தப் பெண்ணை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தினான். அவனுடைய சகோதரர்கள் இருவரும் அந்தப் பெண்ணை அசையவிடாமல் பிடித்துக்கொண்டனர். காவல் தொழிலாளியான அவரது கணவர் அந்த நேரத்தில் வீட்டில் இல்லை.

**மும்பையின்**

## அசிங்கத் தோற்றம்

**2011ம் ஆண்டில் மும்பை காவல்துறையிடம் பதிவான வன்புணர்ச்சி வழக்குகளின் எண்ணிக்கை 219. குற்றம்சாட்டப்பட்டவர்கள் யாரென்றால்....**




ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு குடும்பங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு பிரச்சனைதான் சாய்ரா மீது இந்தத் தாக்குதலுக்கு இட்டுச்சென்றது. அவரை வன்புணர்ச்சி செய்தவன், அவரது கணவரின் மைத்துனன்.

வேலை முடிந்து காலையில் வீட்டுக்கு வந்த கணவர், சாய்ரா நிலைமையைப் பார்த்து அவரை ஒரு தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அது வன்புணர்ச்சி வழக்கு என்பதைப் புரிந்துகொண்ட மருத்துவர்கள், மாநகராட்சிக்கு சொந்தமான ராஜவாடி மருத்துவமனைக்கு சாய்ராவை அனுப்பி வைத்தனர். அங்கே சாய்ராவைப் பரிசோதித்த மருத்துவர் ஆதாரங்களைப் பதிவு செய்துகொண்டு மருத்துவ அறிக்கைகளை ஒப்படைத்தார். உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தினார். ‘‘புகார் பதிவு செய்வதால் எங்களுக்குப் பிரச்சனை ஏற்படக்கூடும் என்று அந்த மருத்துவர் எச்சரிக்கவும் செய்தார். ஆனாலும், புகார் பதிவு செய்வதுதான் நல்லது என்று கூறிய அவர் மருத்துவமனையிலிருந்து ஆதாரங்களைப் பெறுமாறும் காவல் நிலையத்தில் சொல்லுமாறும் அறிவுரை கூறினார்,’’ என்று கூறுகிறார் சாய்ராவின் கணவர் இமாத்.

மாலை 5 மணி அளவில் தம்பதியர் காவல் நிலையத்திற்குச் சென்றனர். சம்பவத்தை அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகு சாய்ரா ஒரு சிறிய அறைக்கு கொண்டு செல்லப்பட்டார். பெண் காவலர்கள் உடை மாற்றுவதற்கான அறை அது. அன்று இரவு முழுவதும் அந்த அறையிலேயே சாய்ரா இருக்க வேண்டியதாயிற்று.

காவல் நிலையத்தில் கழித்த அந்த இரவுப் பொழுதை நினைவு கூறும் சாய்ராவின் கண்கள் கோபத்தால் சிவக்கின்றன. குரல் மேலெழுகிறது. புகார் செய்யச் சென்ற அவரிடம், பிரச்சனையை பெரிதாக்காமல் விட்டுவிடுமாறு காவலர்கள் கூறியிருக்கிறார்கள். ‘‘முதலில் அந்த போலீஸ் அதிகாரி நான் பொய் சொல்வதாக திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தார்,’’ என்கிறார் சாய்ரா. புகார் மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் யாரும் ஆதரவாக வரமாட்டார்கள் என்றும் சாய்ராவிடம் அந்தக் காவல் நிலைய அதிகாரி கூறியிருக்கிறார். ‘‘மருத்துவமனையில் தரப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கையை அவரிடம் காட்டி நான் வன்புணர்ச்சி உள்ளாக்கப்பட்டது உண்மைதான் என்று சொன்னேன். அதற்கு அவர், டாக்டருக்கு நான் லஞ்சம் கொடுத்துவிட்டதாக குற்றம் சாட்டினார்,’’ என்று குமுறுகிறார் சாய்ரா. இரவு முழுக்க காவல் நிலையத்திலேயே வைக்கப்பட்டிருந்த போதிலும் கூட, அவருக்கு உணவு வழங்கப்படவில்லை. சிறுநீர் கழிக்கச் செல்வதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை.

சாய்ராவை வன்புணர்ச்சி செய்தவன் காவலர்களுக்கு லஞ்சம் கொடுத்திருக்கக்கூடும் என்று இமாத் நம்புகிறார். ‘‘ஏனென்றால், பழிவாங்கும் நோக்கத்துடன் பொய்யான புகாரை நாங்கள் பதிவு செய்வதாக காவல் நிலையத்திலிருந்த எல்லோருமே எங்களைக் குற்றம் சொல்வதற்கு வேறு காரணம் இருக்க முடியாது,’’ என்கிறார் இமாத். ‘‘ஒரு போலீஸ்காரர் என்னைப் பார்த்து நான் நடத்தை சரியில்லாதவள் என்று சொன்னார். நூற்றுக்கணக்கான ஆண்களோடு படுக்கிறவள்தான் நான் என்றும் அவர் பேசினார்,’’ என்கிறார் சாய்ரா. புகார் பதிவு செய்யாமல் திரும்பப் போவதில்லை என்று தம்பதியர் உறுதியாக சொன்னதையடுத்து காவலர்கள் அவர்களை நாக்பாதா காவல்துறை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கே இரண்டாவது முறையாக மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. ராஜவாடி மருத்துவமனையில் ஏற்கனவே மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டுவிட்டதால் இரண்டாவது பரிசோதனை தேவையேயில்லை. எனவே, இரண்டாவது சோதனை நடத்த முடியாது என்று நாக்பாதா மருத்துவ அதிகாரிகள் மறுத்துவிட்டனர். சுகாதாரம் மற்றும் சார்புப் பிரச்சனைகள் குறித்த விசாரணை மையம் (CEHAT). என்ற ஒரு அரசுசாரா தொண்டு நிறுவனம் தலையிட்டப் பிறகுதான் காவல்துறையினர் புகார் பதிவு செய்து, இமாத்தின் மைத்துனனைக் கைது செய்தார்கள்.

‘‘பாதிக்கப்பட்டவரைக் காவல் நிலையத்தில் இரவு முழுக்க இருக்குமாறு சொல்வதற்குச் சட்டத்தில் இடமில்லை,’’ என்கிறார் தொண்டு நிறுவனத்தின் மூத்த ஆய்வாளர் உஜ்வாலா கத்ரேக்கர். ‘‘அந்தப் பெண்ணுக்கு வசதியான இடத்தில் அவரது வாக்குமூலத்தை பெற்றுப் பதிவு செய்ய வேண்டும் என்பதே சட்டம். அது அவருடைய வீடாகவே கூட இருக்கலாம்,’’ என்கிறார் அவர். வன்புணர்ச்சி நடந்ததா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியது நீதிமன்றம்தானேயன்றி, காவல்துறையினர் அல்ல. ‘‘திரும்பத் திரும்பக் கேள்வி கேட்பதன் மூலமாகவும் இன்னொரு மருத்துவ சோதனைக்கு உட்படுமாறும் அந்தப் பெண்ணை காவல்துறையினர் சித்திரவதை செய்யக்கூடாது,’’ என்கிறார் கத்ரேக்கர்.

மைத்துனன் கைது செய்யப்பட்டப் பிறகு அவனது குடும்பத்தினர் மற்றும் அண்டை வீட்டுக்காரர்களின் கோபத்திற்கு சாய்ரா, இமாத் இருவரும் இலக்கானார்கள். ‘‘எங்கள் இருவரையும் கொன்றுவிடுவதாகக் கூட அவர்கள் எங்களை மிரட்டினார்கள்,’’ என்கிறார் சாய்ரா. மிரட்டல்கள் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததால் தம்பதியர்கள் இருவரும், மற்றவர்களுக்குத் தெரியாத ஒரு இடத்திற்குச் சென்று தங்களது தொலைபேசி எண்களையும் மாற்றிக்கொண்டார்கள். தொண்டு நிறுவனம் அவர்களுக்கு உளவியல், சமூகவியல் மற்றும் சட்ட உதவிகளை வழங்கிக் கொண்டிருந்தது. ‘‘இப்படிப்பட்ட வழக்குகளில், பாதிக்கப்பட்டவரும் அவரது குடும்பத்தினரும் எளிதாகத் தாக்குதல்களுக்கு

உள்ளாகிவிடுகிறார்கள். அதனால்தான் நாங்கள் இந்தத் தம்பதியருக்குத் தொடர்ந்து உதவி செய்து வந்தோம். அவர்கள் சரியான செயலைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினோம்,'' என்கிறார் CEHAT அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளர் சானா கான்ட்ராக்டர்.

குற்றம்சாட்டப்பட்ட நபர் மூன்று மாத காலம் சிறையிலிருந்த பிறகு தற்போது ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார். வழக்கில் அண்மையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதி கிடைப்பதற்கு சாய்ரா இன்னும் வெகுதூரம் சென்றாக வேண்டும். கணவரும் மாமியாரும் நாத்தனாரும் ஆதரவாக உள்ள நிலையில் நம்பிக்கையோடு இருக்கிறார் சாய்ரா.

வன்புணர்ச்சி குறித்த சமூக கருத்தாக்கங்களுக்கு இமாத் முற்றிலும் அப்பாற்பட்டவர் அல்ல. ஆனால், ''சாய்ராவை என்னால் தள்ளி வைத்திருக்க முடியும், வேறு பெண்ணைத் திருமணம் செய்திருக்க முடியும். ஆனால், நான் அப்படிச் செய்யவில்லை. இதுதான் என் தலைவிதி என்றால் என்னால் எப்படி இதிலிருந்து தப்பிக்க முடியும்,'' என்று கேட்கிறார் இமாத். பேசிக்கொண்டிருக்கும்போதே அவர் அடிக்கடி குலுங்கி அழத் தொடங்கிவிடுகிறார். ஆனால், சாய்ரா மன உறுதியோடு இருக்கிறார். ''நான் எந்தத் தவறும் செய்யவில்லை. பிறகு நான் ஏன் பயப்பட வேண்டும்? குற்றவாளி சுதந்திரமாக தப்பித்துச் செல்ல நான் விடமாட்டேன்,'' என்கிறார் சாய்ரா. ''பாதிக்கப்பட்டவர்கள் மனச்சோர்வுக்கு உள்ளாகிவிடுவதால், வன்புணர்ச்சி வழக்குகள் பெருமளவுக்கு வலுவிழந்துவிடுகின்றன. ஆனால், நாங்கள் இதுவரைப் பார்த்ததில் மன வலிமையோடு இருக்கிறவர்களில் ஒருவர்தான் சாய்ரா. அவர் உறுதியோடு இருக்கிறார், நிச்சயமாகப் போராடுவார்,'' என்கிறார் சானா கான்ட்ராக்டர்.

புகார்களைப் பதிவு செய்ய காவல்துறையினர் மறுக்கிறபோது, வன்புணர்ச்சியில் பாதிக்கப்பட்டவர்களில் மிகச் சிலர்தான் தொடர்ந்து வழக்கை நடத்த முன் வருவார்கள். காவல் நிலையத்தில் அதிக நேரம் வைக்கப்பட்டிருப்பது ஒருவகையில் சட்டவிரோதமான காவல் நடவடிக்கைதான். சிலர் அதனைப் பொறுத்துக்கொள்கிறார்கள். காவல்துறையினர் வழக்கம்போல் சாய்ரா மீதே குற்றம் சொல்லி விசாரணையை நடத்தியதைக் கூட சாய்ரா பொறுத்துக்கொண்டார். ''காவல் நிலையங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான நடைமுறை விதிகள் இருக்கின்றன என்ற போதிலும், காவல் துறையினர் பதில் அளிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடு எதுவும் இல்லை. இத்தகைய பல வழக்குகள் குறித்து, சிலர் போலீஸ் அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டும் கூட, நாங்கள் உயர் அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறோம். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டியிருக்கிறது,'' என்று கத்ரேக்கர் கூறுகிறார்.

**(சம்பந்தப்பட்ட சிலரது பெயர்கள் அவர்களது தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி மாற்றப்பட்டுள்ளன)**

**ஆதாரம்: THE WEEK, • JANUARY 27, 2013**

## டில்லியில் நாள் ஒன்றுக்கு 12 குழந்தைகள் மாயமாகின்றன

'டில்லியில் நாள் ஒன்றுக்கு, 12 குழந்தைகள் காணாமல் போகின்றன. இவற்றில், பெண் குழந்தைகளே அதிகம்' என, அரசின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மேலும் கூறப்பட்டுள்ளதாவது: டில்லியில், இந்த ஆண்டு, இம்மாதம் 15ம் தேதிவரை, 3,171 குழந்தைகள் காணாமல் போயுள்ளன. இவற்றில், 1,652 பெண் குழந்தைகள். 1,519 ஆண் குழந்தைகள். அதாவது, நாள் ஒன்றுக்கு, 12 குழந்தைகள் காணாமல் போயுள்ளன. இருப்பினும், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், இது குறைவே. 2011ம் ஆண்டில், ஆண் குழந்தைகள் 2,665, பெண் குழந்தைகள் 2,446 என மொத்தம் 5,111 குழந்தைகள் காணாமல் போயின. அதாவது, நாள் ஒன்றுக்கு, 14 குழந்தைகள் காணாமல் போயின. கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஆண் குழந்தைகளை விட, பெண் குழந்தைகள் காணாமல் போவது அதிகரித்துள்ளது. அத்துடன், இவற்றில் கண்டுபிடிக்க முடியாத, பெண் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளன. குழந்தைகள் மாயமாவதற்கு, குறிப்பிடத்தக்கக் காரணம் எதுவும் இல்லை. சிலரால் தவறாக வழிகாட்டப்படுவது, பெற்றோர்கள் அன்பாக நடந்து கொள்ளாதது, படிப்பில் நாட்டம் இல்லாமை, கடத்தப்படுவது உட்பட பல காரணங்களால், காணாமல் போகின்றன.

இவ்வாறு புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆதாரம்: தினமலர், 27.8.2012**

# கூடிய சீக்கிரம் கல்வி தற்கொலை செய்து கொள்ளும்

- சென்னை அண்ணா பல்கலைக் கழக பொறியியல் மாணவர் மணிவண்ணன், 26 அரியர் இருந்ததால் தற்கொலை செய்து கொண்டார்.
- சென்னை அண்ணா பல்கலைக் கழக பொறியியல் மாணவர் தைரியலஷ்மி, தன்னால் படிக்க முடியவில்லை என்பதால் குடும்பத்தின் கனவை தான் சிதைத்துவிடக்கூடும் என்பதால் தற்கொலை செய்து கொண்டார். (தற்கொலை செய்து கொண்ட தைரியலஷ்மியை மருத்துவமனையில் இருந்து சொந்த ஊரான விழுப்புரம், கேவிபாளையம் எடுத்துச் செல்லக்கூட அவரது பெற்றோரிடம் வசதியில்லை.)
- அயனாவரத்தில் 9வது படிக்கும் கவிதா என்கிற மாணவி தேர்வில் தான் எழுதிய பதில்களை தனது சக மாணவிக்கு கொடுத்ததால் ஆசிரியர் கண்டித்தார். வீட்டிற்கு வந்த மாணவி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டாள்.
- திருவண்ணாமலை தனியார் பள்ளி ஒன்றில் மாணவர்களுக்கு தேர்வில் காப்பி அடிக்க ஆசிரியர்கள் உதவி செய்தனர். கட்டமைக்கப்பட்ட விதத்தில் காபி அடித்தல் என்று இதைச் சொல்கிறார்கள்.
- பள்ளி வாகனங்கள் விபத்துக்குள்ளாகி மாணவர்கள் உயிரிழப்பு முறையான இடைவெளிகளில் நடக்கின்றன.
- சென்னையில் தனியார் பள்ளியில் ஆசிரியை ஒருவர் வகுப்பறையில் கொல்லப்பட்டார்.
- சென்னை தனியார் பள்ளி ஒன்றில் தேர்வு எழுதும்போதே வினாக்கள் கடுமையாக இருந்ததால் மாணவி ஒருவர் இரண்டாவது மாடியில் இருந்து குதித்தார்.
- ஏப்ரல் துவக்கத்தில் மட்டும் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 4 மாணவர்கள் குறை மதிப்பெண் காரணமாக தற்கொலை செய்து கொண்டனர்.
- சென்னையைச் சேர்ந்த மாணவன் ஒருவன் தேர்வு எழுதாமல் போனபோது, வீட்டுக்குப் போனால் பாட்டி திட்டுவார் என்று நினைத்து கடற்கரையில் ஒரு கடையில் வேலைக்குப் போய்விட்டான்.
- புதுச்சேரி கல்வி அமைச்சர் தனக்கு பதில் வேறொருவரை பத்தாம் வகுப்பு தேர்வு எழுத அனுப்பி சிக்கிக்கொண்டார்.
- உயரதிகாரியும் தலைமை ஆசிரியரும் திட்டியதால் சென்னை அரசுப் பள்ளி ஆசிரியர் ஒருவர் அமிலம் குடித்தார்.

சமீப சில மாதங்களில் தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்கள் இவை. கெயாஸ், (Chaos) கட்டுக்கடங்காத கலவரச் சூழல். உலகமய ஆட்சியாளர்கள் கல்விச் சூழலை அந்த நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்கள்.

பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வி வரை அடுத்தடுத்து மாணவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். கும்பகோணத்தில் 92 குழந்தைகளை உயிருடன் தீ தின்னப் பார்த்திருந்தோம். இப்போது அதையொத்த ஒன்று தவணை முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

முதலாளித்துவம் என்றால் எங்கும் எதிலும் போட்டி. தனியார் பள்ளிகள் போட்டி போட்டு லாபம் சம்பாதிக்க, மாணவர்கள் மதிப்பெண் பெறுவதில் போட்டி, இப்போது யார் முதலில் தற்கொலை செய்துகொள்வது என்பதில் போட்டி. ஏதேதோ முதலிடம் பற்றி ஜெயலலிதா பேசிக்கொண்டிருக்கிறார். தமிழ்நாடு மாணவர் தற்கொலைகளில், கல்விச் சூழல் சீர்குலைவதில் முதலிடம் பிடிக்க விரைந்து முன் சென்று கொண்டிருக்கிறது. சட்டமன்றத்துக்கு வெளியே மாணவர்கள் தற்கொலைகள் மக்கள் மத்தியில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கிக்கொண்டிருந்தபோது, சட்டமன்றத்துக்குள் அஇஅதிமுகவும் திமுகவும் காங்கிரசும் மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம் கொண்டு வந்த பெருமை யாருக்கு என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

நமது ஊழல் அரசியல்வாதிகள், அதிகாரிகளைப் பார்த்து நமது மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். எத்தனை முறைகேடுகளில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். விசாரணை, கைது, சிறை என்றெல்லாம் சந்தித்தாலும் விருது பெற்றதுபோல் சிரித்துக்கொண்டே போஸ் தருகிறார்களே. யாராவது தற்கொலை செய்து கொண்டார்களா ?

மாணவர்கள் தற்கொலையும் மற்ற பிற முறைகேடுகளும் இந்தியா முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன. தேசிய குற்றப்பதிவு அலுவலகத்தின் 2010 விவரங்கள்படி

நாளொன்றில் 7 மாணவர்கள் தேர்வில் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டனர்.

73 நாடுகளின் மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட சர்வதேச மாணவர் மதிப்பீட்டு ஆய்வில் இந்தியா 72வது இடத்தைப் பிடித்தது. வாசிப்பு, எண்கணிதம், அறிவியல் போன்ற திறன்களில் கிர்கிஸ்தான் மட்டும்தான் இந்தியாவுக்கு அடுத்த நாடாக இருந்தது. எண்கணித ஆற்றலில் எட்டாவது படிக்கிற இந்தியக் குழந்தையின் தரம் மூன்றாவது படிக்கிற தென்கொரிய குழந்தையின் தரத்தை ஒத்து இருக்கிறது என்றும் வாசிப்புத் திறனில் இரண்டாவது படிக்கிற ஷங்காய் குழந்தையின் தரத்தை ஒத்து இருக்கிறது என்றும் அதிர்ச்சி தரும் விவரங்களை ஆய்வு முன்வைத்துள்ளது.

தமிழக மாணவர்களைப் பொறுத்தவரை, சாதாரண வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச படிப்புத் திறன் 17% மாணவர்களுக்கு மட்டுமே இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் 83% மாணவர்களுக்கு அந்தத் திறன் இல்லை.

தமிழகத்தின் 29 மாவட்டங்களில் 26,000 மாணவர் மத்தியில் ஆய்வு செய்து, பிரதம் என்கிற தொண்டு நிறுவனம் முன்வைத்துள்ள கல்வி ஆய்வு ஆண்டறிக்கை 2011 தருகிற தகவல்கள்படி, 5ஆம் வகுப்பு மாணவர்களில் 32% பேர் மட்டுமே தமிழில் ஒரு எளிமையான கதையை வாசிக்கும் திறன் பெற்றவர்கள். பெருக்கல் மற்றும் வகுத்தல் கணக்குகள் தெரிந்திருக்க வேண்டிய 4ஆம் வகுப்பு மாணவர்களில் 40.6% பேர் மட்டுமே இரண்டு இலக்க கழித்தல் கணக்கு போட முடிகிறது.

தனியார் பள்ளிகள் மாணவர்களை உலகத் தரத்துக்கு உயர்த்தும் என்ற வாதங்கள் இந்த ஆய்வுகள் முன்வைத்துள்ள விவரங்களால் தூளாகிப் போயுள்ளன.

கல்வி தனியார்மயத்தின் உண்மை முகம் வெளிப்பட வெளிப்பட, முறைகேடுகள் அதிகரிக்க அதிகரிக்க, தனியார் கல்வி நிறுவனங்களைக் காப்பாற்ற கல்வி பற்றி அசாத்திய அக்கறை உள்ளவர்கள் போல் ஆட்சியாளர்கள் காட்டிக்கொள்ள வேண்டியதாகிறது.

அரசியலமைப்புச் சட்டப்படி அரசியலமைப்புச் சட்டம் உருவாகி 10 ஆண்டுகளுக்குள் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி தருவது அரசின் கடமை. அரசு இந்தக் கடமையில் இருந்து தவறி பல பத்தாண்டுகள் ஆகிவிட்டபின் அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் கோட்பாட்டை அமலாக்க கல்வி உரிமைச் சட்டம் என்கிறார்கள். அடிப்படை உரிமையைப் பாதுகாக்கும் சட்டத்தையும் கேள்விக்குள்ளாக்க ஜனநாயகத்தில் இடமிருப்பதால், அதன் அரசியலமைப்புச் சட்டத் தகுதியை உச்சநீதிமன்றம் தூக்கிப் பிடிக்க வேண்டியதாயிற்று.

இந்தச் சட்டப்படி சிறுபான்மையினர் பள்ளிகள் தவிர பிற தனியார் பள்ளிகள், பின்தங்கிய பின்னணி கொண்ட மாணவர்களுக்கு 25% இலவச இடம் ஒதுக்க வேண்டும். இந்த ஒதுக்கீடு கல்வியில் உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். இந்த ஒதுக்கீட்டை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அதில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்பைக் காப்பாற்றினார்கள்.

உண்மையில், தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்ற நீதிபதிகள்பால், இந்திய குழந்தைகளுக்கு தாத்தா... நீங்க நல்லவரா ? கெட்டவரா ? என்ற கேள்வி எழ வாய்ப்புள்ளது. ஒரு விதத்தில் தீர்ப்பு, கல்வி தனியார்மயத்துக்கு அங்கீகாரம்.

கல்வி உரிமைச் சட்டம் கல்விக்கு அரசே முழு பொறுப்பு என்று சொல்லவில்லை. கல்வி தனியார்மயம் பற்றி எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை. சட்டம் கல்வி தனியார்மய எல்லைகளுக்கு உட்பட்டது. இதில் 25% இட ஒதுக்கீடு என்ன சமத்துவத்தைக் கொண்டு வரும் ? இந்தத் தீர்ப்பு கல்வி தனியார்மயத்துக்கு, மாணவர் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு முடிவு கட்டிவிடுமா ? நடந்து கொண்டிருக்கிற மாணவர் தற்கொலைகளுக்குத் தீர்வு தருமா ?

இந்த 25% ஒதுக்கீட்டால் தங்கள் லாபத்தில் 25% பாதிப்பு ஏற்படும் என்ற கல்வி வியாபாரிகள் கூக்குரல் எழுப்புகிறார்கள்.

மிகவும் அப்பட்டமான மக்கள் விரோதக் கொள்கைகளை அதிஉயர்ந்த கொள்கை என்று முன்வைப்பதில் கபில்சிபலுக்கு நிகர் யாரும் இருக்க முடியாது. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அவர் கையில். வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வி உரிமைச் சட்டத்தை நிறைவேற்ற மாநில அரசாங்களுக்கு 10 கட்டளைகள் இட்டுள்ள அவர், தனியார் பள்ளிகளுக்கு ஏற்படக்கூடிய 25% லாப இழப்பைச் சமாளிக்க வழிசொல்கிறார். அரசுப் பள்ளிகளில் ஒரு மாணவருக்கு என்ன செலவாகுமோ அதை அரசு தரும். அரசு தரவிருக்கும் இழப்பீடு போதுமானதாக இருக்காது என்று கபில் சிபல் ஒப்புக்கொள்கிறார். அதாவது அரசு கல்வியில் தேவையான அக்கறை காட்டவில்லை என்பதை

ஒப்புக்கொண்டு இனியும் அக்கறை காட்டப்போவதில்லை என்றும் அறிவிக்கிறார். தனியார் பள்ளிகள் அரசு தரும் இழப்பீடு போதாமையை ஈடு செய்ய பெருநிறுவனங்களை அணுகி அவற்றின் உதவியைக் கேட்க வேண்டும் என்கிறார். பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு பற்றி எடுத்துச் சொல்லி அவர்கள் பங்களிப்பைப் பெற தனியார் பள்ளிகள் முயற்சிக்க வேண்டுமாம். அரசே கல்வி பற்றிய பொறுப்பை தட்டிக் கழிக்கும் சூழலில் தனியார் பள்ளிகளும் பெரு நிறுனங்களும் கல்விக்குப் பொறுப்பேற்பார்கள் என்ற கபில் சிபல் நம்மை நம்பச் சொல்கிறார்.

25% எப்படி அமலாகும்? உயர்கல்வி நிறவனங்களில் இடஒதுக்கீடு அமலாக்கப்பட்டு அதனால் சில தலித் மாணவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு பற்றி அ. முத்துகிருஷ்ணன் உயிர்மை பத்திரிகையில் நவம்பர் 2011ல் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில் தனது ஆய்வு இன்னும் நிறைவு பெறவில்லை என்றும் இன்னும் தொடர்வதாகவும் சொல்லியிருந்தார். முற்றுப்பெறாத ஆய்வின் அடிப்படையில் அவர் அந்தக் கட்டுரையில் சொல்லியிருந்த விஷயங்களே அதிர்ச்சி தருவதாக இருந்தன. ரூர்கி அய்அய்டி, டில்லி ஏய்ம்ஸ், சண்டிகர் மருத்துவக் கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அந்தக் கல்லூரிகளில் சேர்ந்த தலித் மாணவர்கள் ஆசிரியர்களால், சக மாணவர்களால், கடுமையான சாதி பாகுபாடுகளுக்கு உள்ளாகி மன உளைச்சல் தாளாமல் தற்கொலை செய்து கொண்டதை அவர் அம்பலப்படுத்தியிருந்தார். இந்தியாவின் மிக உயர்ந்த உயர்கல்வி நிறுவனங்களில் கடந்த 4 ஆண்டுகளில் சாதியின் பெயரால் அவமானப்படுத்தப்பட்டு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அந்த உயர்கல்வி நிறுவனங்களை எட்டிய 18 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டதாக குறிப்பிட்டிருந்தார். இது உயர்கல்வி நிறுவனத்தில், மெத்தப் படித்தவர்கள் கூடியிருக்கிற இடத்தில் நடந்தது. பள்ளிகள் எப்படி இருக்கும்?

நாகப்பட்டினம், வேதாரண்யத்தில் உள்ள அரசு ஊரட்சி துவக்கப்பள்ளியில் 80களின் துவக்கத்தில் சில தலித் மாணவர்கள் படித்தார்கள். சாதி பாகுபாடு மிகுந்திருந்ததால் அதற்குப் பிறகு இன்றுவரை தலித் மாணவர்கள் அந்தப் பள்ளியில் சேர்வதில்லை. வேறு வழியின்றி தனியார் பள்ளிகளுக்குச் செல்கிறார்கள்.

2010–2011ல் அனைவருக்கும் கல்வி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 30 சதம் செலவழிக்கப்படவில்லை. இந்தியாவில் உள்ள பள்ளிகளில் 10% பள்ளிகளில் குடிநீர் வசதியும் 40% பள்ளிகளில் கழிவறை வசதியும் இல்லை. 95.2% பள்ளிகளில் சட்டம் வரையறுத்துள்ள வசதிகள் அனைத்தும் இல்லை. வெறும் 4.8% அரசுப் பள்ளிகளில்தான் சட்டம் சொல்கிற வசதிகள் உள்ளன. 30% பள்ளிகளில் 5% வசதிகள் கூட இல்லை. 25% அமலானாலும் 90 சதம் குடும்பங்கள் அரசுப் பள்ளிகளைத்தான் தங்கள் குழந்தைகள் கல்விக்கு நம்பியிருக்கும். அரசுப் பள்ளிகள் தங்கள் தரத்தை உயர்த்துவது, கூடுதல் அரசுப் பள்ளிகள் உருவாக்குவது ஆகிய அவசிய அவசர நடவடிக்கைகள் பற்றி கபில் சிபல் பேச மறுக்கிறார்.

அரசுப் பள்ளி எதிர் தனியார் பள்ளி, அரசுப் பள்ளி ஆசிரியர் எதிர் தனியார் பள்ளி ஆசிரியர் என்று ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்தி கல்வி வர்த்தகமயம் என்ற அடிப்படைப் பிரச்சனையைப் பூசி மெழுகப் பார்க்கிறார்கள். அரசுப் பள்ளிகள் நக்சலைட்டுகளை உருவாக்குகின்றன என்றும் தனியார் பள்ளிகள் ஒழுக்கம் கற்றுத் தருபவை என்றும் ஸ்ரீரவிசங்கர் போன்ற அறிவாளிகள் சொல்லி விடுகிறார்கள். மூளைக்கு விலங்கு போட்டு, மூலதனத்தை நியாயப்படுத்தப் பார்க்கிறார்கள். கல்வியை லாபக் காடாக்கி மாணவர்களை, அவர்கள் எதிர்காலத்தை, நாளைய சமுதாயத்தைப் பகடைக் காய்கள் ஆக்குகிறார்கள்.

தமிழ் சமூகத்தின் அறிவாளிகளில் ஒருவர் என்று தன்னைக் கருதிக் கொள்ளும் ஒருவர் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் சரியாக வேலை செய்யாததால்தான் தனியார் பள்ளிகளுக்குப் பெற்றோர்கள் செல்கிறார்கள் என்கிறார். கிராமப்புறங்களில் வறிய குடும்பத்து மாணவர்கள் அரசுப் பள்ளிகளில்தான் படிக்கிறார்கள் என்றும் அவர்கள் தரம் உயராமல் இருக்க ஆசிரியர்களே காரணம் என்றும் சொல்கிறார்.

எட்டாவது வகுப்பு வரை பாஸ் செய்து விடுவது என்பது கொள்கை. அது வரை மதிப்பெண் கவலையில்லாமல் இருந்துவிட்டு, பத்தாவது வகுப்புக்குள் நுழைந்ததும் குழந்தைகளையும் ஆசிரியர்களையும் 100% வெற்றி என்ற சனி பிடித்துவிடுகிறது. அரசு மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்படும் அழுத்தம்தான் ஆசிரியர் அமிலம் குடிப்பதில் வெளிப்பட்டது.

ஆறாம் வகுப்பில் இருந்து அடிப்படைகளைக் கற்றுக் கொள்வதில் அல்லது கற்றுத் தருவதில் மெத்தனமாக இருந்துவிட்டு மூன்றாண்டு கல்வியை ஓராண்டில் படித்து மாணவர்கள் உயர் மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூகம் என அனைவரும் எதிர்பார்ப்பது நடைமுறை சாத்தியமற்றது.

சிறைக் கைதிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். மாணவர்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் சட்டதிட்டங்களின் இறுக்கமான சுவர்களாக, கறாரான மதிப்பெண் தராசுகளாக மாணவர்களை அச்சுறுத்துகின்றனவே தவிர அவர்கள் அறிவுபூர்வமான வளர்ச்சிக்கு மிகக் குறைவாகவே பங்களிக்கின்றன.

அக்கம்பக்கம் பார்க்காமல், அறிவைச் செலுத்தாமல், மாறாத சூத்திரங்களை மனப்பாடம் செய்து மதிப்பெண் பெறும் எந்திரங்களாக மாணவர்களை மாற்றி பள்ளிவிட்டு வெறியேறும்போது, மொத்த சமூகத்தையும் சூத்திரங்களுக்குள் அடங்கியதாக, அல்லது அடக்கப்பட வேண்டியதாகப் பார்க்கும் வாய்ப்பு உருவாகிவிடுகிறது. இப்படிப்பட்ட மாணவர்கள் மட்டுமே வேண்டும் என்கிறார் ஸ்ரீஸ்ரீக்கள்.

திருவண்ணாமலை தனியார் பள்ளியில் அமைப்பாக்கப்பட்ட விதத்தில் மாணவர்கள் பார்த்து எழுதிய முறைகேட்டில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுவிட்டனர். அடுத்தடுத்து அந்தப் பள்ளி தீவிரமான கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. மாணவர்களுக்கு தேர்வுக் காய்ச்சலுடன், திடீர் சோதனைக் காய்ச்சலும் சேர்ந்துகொள்ள தேர்வுக்குப் படிப்பதில் கவனம் செலுத்த முடியாமல் போனது. பெற்றோர்கள் பள்ளியை முற்றுகையிட்டார்கள். மொத்த சூழலும் பதட்டமானது. இப்போது, பள்ளி தொடர்ந்து நடக்கும். கல்விக் கட்டணம், நன்கொடை எல்லாம் எப்போதும் போல் வரும். பாதிப்பு மீண்டும் மாணவர்களுக்குத்தான்.

கோடை காலத்தில் குளிர்சாதன கருவிகளின் விளம்பரங்கள் அதிகரிப்பதுபோல் கல்வி நிறுவன விளம்பரங்கள் வெளியாகும். அடுத்த மாதம் முழுவதும் கல்வி கட்டண உயர்வு தாளாமல் பெற்றோர் குமுறுவது செய்தியாகும்.

ஆசிரியர் தகுதித் தேர்வு அறிவித்து ஆசிரியர் பயிற்சியில் பட்டம் பெற்று, வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துவிட்டு, 40 வயதுகூட கடந்து, வேலைக்காகக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் நம்பிக்கையில் மண் போட்டார் ஜெயலலிதா. தரமான ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் என்ற கல்வி உரிமைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதை அமலாக்குவதே இதன் நோக்கம் என்று சொல்லிவிட்டார். படித்து பட்டம் பெற்று வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு சாக்கு சொன்னதுபோல், கல்வி கட்டண உயர்வால் குமுறும் பெற்றோருக்கும் சாக்கு சொல்வார். தனியார்மயப் பிசாசிடம் இருந்து கல்வியை விடுவிக்கும் வரை கல்விச் சூழல் கலவரமாகவே தொடரும். கூடிய சீக்கிரம் கல்வி தற்கொலை செய்துகொள்ளும்.

**– ஆதாரம்: மா லெ தீப்பொறி மே 1–15 தொகுதி 10 இதழ் 14**

## நடப்பு ஆண்டில் 6406 வழக்கு பதிவு

### *குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 24% அதிகரிப்பு*

இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 24 சதவீதம் அதிகரித்துள்ளன. நடப்பாண்டில் மட்டும் 6406 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சி தகவல்களை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை சார்பில் 2012ல் குழந்தைகள் என்ற தலைப்பில் நாடு தழுவிய சர்வே நடத்தப்பட்டது. இதில் கிடைத்த அதிர்ச்சி **தகவல்கள் வருமாறு:**

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 24 சதவீதம் அதிகரித்துள்ளன. குழந்தை கடத்தல் என்பது 43 சதவீதம், கற்பழிப்பு 30 சதவீதம் என்று உயர்ந்துள்ளன. நடப்பாண்டில் மட்டும் 6406 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதையும் சேர்த்து இதுவரை நாடெங்கிலும் மொத்தம் 33,100 வழக்குகள் பதிவாகியுள்ளன. உத்தரபிரதேசத்தில்தான் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிக அளவில் பதிவாகியுள்ளன. இங்கு 16.6 சதவீதமும், மத்திய பிரதேசத்தில் 13.2 சதவீதமும், டெல்லியில் 12.8 சதவீதமும், பீகாரில் 6.7 சதவீதம், ஆந்திராவில் 6.7 சதவீதம் என குழந்தைகளக்கு எதிரான குற்றங்கள் பதிவாகியுள்ளன.

உத்தர பிரதேசம் மற்றும் டெல்லியில் குழந்தைகள் கடத்தல் அதிகமாக உள்ளது. மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசத்தில் குழந்தை கற்பழிப்பு சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன. மகாராஷ்டிரா, சட்டீஸ்கர் மாநிலங்களில் சிசுக்கொலைகள் அதிகளவில் நடக்கின்றன.

பாலியல் தொழிலில் ஈடுபடுத்த பெண் குழந்தையை வாங்குவதில் மகாராஷ்டிரா முதல் இடத்தில் உள்ளது. இங்கு பதிவாகும் வழக்குகளில் 74 சதவீத வழக்குகள் பெண் குழந்தையை வாங்கிய வழக்குகள்தான். கற்பழிப்பு சம்பவங்களில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நடந்த மாநிலமாக மேற்கு வங்கம் முதல் இடத்தில் உள்ளது. இங்கு 298 கற்பழிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளன. தங்களுக்கு என்ன நடக்கிறது என்றே தெரியாத குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு புள்ளி விவரங்களில் கூறப்பட்டுள்ளது.

**ஆதாரம்: தினகரன், 7.10.12**

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளின் பாதுகாப்பு – பள்ளி வளாகம், அதன் சுற்றுப்புறம் மற்றும் வாகனங்கள் பராமரித்தல் – பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (எக்ஸ்.2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 270

நாள். 22.10.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
ஐப்பசி 6

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.131, பள்ளிக் கல்வித் துறை, நாள். 10.8.2006.
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் அறிக்கை நாள். 25.7.2012.
3. அரசு தலைமை வழக்கறிஞரின் கடித எண்.20272/2012, நாள். 27.7.2012.
4. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.6979/ அ4/2012, நாள். 28.7.2012.

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு, உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் குறைந்தபட்ச உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்து அரசாணைகள் வெளியிடப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதத்தில், பள்ளிகளில், பள்ளி வாகனங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை அனுப்பி; அனைத்து பள்ளிகளிலும் செயலாக்கம் செய்ய வேண்டியது அவசியம் எனத்தெரிவித்து அனைத்து பள்ளிகளும் பின்பற்ற உரிய ஆணை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் வரைவு சுற்றறிக்கையை அரசு ஏற்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளும் மாணவ/மாணவியர்களின் நலன் கருதி கீழ்க்காணும் நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

**(1) கட்டிடங்கள்**

i) பள்ளிகளில் கட்டிட வரைபட அனுமதி உரிய அலுவலரிடம் பெற்ற பின்னரே கட்டிடங்கள் கட்டப்படவேண்டும்.

ii) பள்ளி வளாகத்திற்குள் அமைந்துள்ள திறந்த வெளிக் கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், செப்டிங் டாங்க் ஆகியன நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

iii) பள்ளிக் கட்டிடத்தின் மேற்கூரைக்குச் (Terrace) செல்லும் வழி மூடப்பட்டு பூட்டப்பட்டிருக்க வேண்டும்.

iv) பள்ளி வளாகத்திற்குள் சாதாரண கதவுகள் தான் அமைக்க வேண்டும். இழுவைக் கதவுகள், உருளைக் கதவுகள் ஆகியவை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

v) மாடிப்பகுதியில் பாதுகாப்பான தடுப்புச் சுவர் போதிய உயரத்திற்கு ஏற்படுத்த வேண்டும்.

vi) பள்ளி ஆய்வகத்தில் வெப்பம் வெளியேற வெப்பப்போக்கி (Exhaust fan) அமைக்க வேண்டும்.

vii) மாடிபடிக்கட்டுகளில் உள்ள கைப்பிடி அமைப்பின் மீது மாணவர்கள் சறுக்கி விளையாடுவதை தவிர்க்க, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் வகுப்பிற்குள்ளும், வெளியேயும் ஆசிரியர் கண்காணிப்புப் பணியில் இருத்தல் வேண்டும்.

**(2) <u>குடிநீர்</u>**

(i) பாதுகாப்பான குடிநீர் தரப்படவேண்டும், குடிநீர் சேமித்து வைக்கும் தொட்டிகள் தூய்மையான முறையில் இருத்தல் வேண்டும். எப்பொழுது யாரால் எப்படி சுத்தம் செய்யப்பட்டது என்பதற்கான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். குடிநீர் உரிய முறையில் சுத்திகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் விநியோகிக்கப்பட வேண்டும்.

(ii) மேலும் 20 மாணவர்களுக்கு 1 குழாய் என்ற விகிதத்தில் குடிநீர் குழாய்கள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) பாத்திரங்கள் கழுவ, கை, கால்கள் கழுவ 20 மாணவர்களுக்கு 1 குழாய் என்ற அளவில் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தரை வழுக்கல் இன்றி அமைக்கப்பட்டு பராமரிக்கப்படவேண்டும்.

**(3) கழிப்பிடங்கள்**

(i) 20 மாணவர்களுக்கு 1 சிறுநீர் கழிப்பறை மற்றும் 50 மாணவர்களுக்கு 1 மலக் கழிப்பறை என்ற அளவில், போதிய இடைவெளியில் கழிப்பறைகள் காற்றோட்டம் / போதிய வெளிச்சத்துடன் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவை அன்றாடம் தூய்மையாகப் பேணப்பட வேண்டும். கிருமி நாசினி தெளித்து ஆரோக்கியமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக வகுப்பறையை ஒட்டியே கடைசியாக அமைக்கப்படவேண்டும். தனியே மைதானத்திலோ அல்லது ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியிலோ அமைதல் கூடாது. கட்டிட உறுதி / உரிமச் சான்றுகள் கழிப்பறைகளுக்கும் அவசியம்.

(ii) கழிப்பறைகள் தண்ணீர் குழாய் வசதியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

(iii) தண்ணீர்த் தொட்டிகள் மாணக்கர்களால் திறக்க முடியாதபடி மூடப்பட்டு இருக்க வேண்டும். மழலையர் மற்றும் தொடக்கநிலை வகுப்பு குழந்தைகள், நடத்தாட்டிகள் உதவியுடன் கழிவறைக்குச் சென்று வர ஏற்பாடுகள் செய்துதர வேண்டும்.

**(4) மின்சாரம்**

(i) அனைத்து இடங்களிலும் மின்சார இணைப்புகள், மின் சாவி (switches) போன்றவை பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) பள்ளிகளில் உள்ள மின்சார சாதனங்கள் அவ்வப்போது பழுது நீக்கி அவற்றின் பாதுகாப்புத் தன்மை குறித்து அங்கீகரிக்கப்பட்ட மின் அலுவலரின் (Licenced Electrical Inspectors) சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) உடைந்த / சிதிலமடைந்த கட்டடங்கள், சுவர்கள், அறுந்த / துண்டித்த நிலையில் மின்சார ஒயர்கள் இருப்பின் அவைகள் உடனடியாக நீக்கம் செய்யப்படவேண்டும். அதுகாறும் மாணவர்கள் / பணியாளர்கள் அவ்விடம் செல்லாமல் இருக்க பாதுகாப்பான முறையில் உரிய தடுப்பு அமைப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

**(5) இருக்கைகள்**

(i) மாணவர்கள் அமரும் பெஞ்சுகள் பின்புறம் முதுகு சாய்வகம் உள்ள முறையில் அமைக்கப்படல் வேண்டும்.

(ii) பெஞ்ச், டெஸ்க் ஆகியவற்றில் கூரிய முனைகள் இல்லாத வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். எக்காரணங்கொண்டும் அமர்ந்தால் ஆடக்கூடிய மற்றும் உடைந்த நிலையிலான இருக்கைகள் பயன்படுத்தக்கூடாது. அவை உடனடியாக நீக்கம் செய்யப்படவேண்டும்.

**(6) முதலுதவி**

(i) பள்ளிகளில் ஆபத்துக் காலங்களில் முதலுதவி செய்ய ஏதுவாக முதலுதவி பெட்டிகள் அனைத்து மருத்துவ பொருட்களுடன் அமைக்கப்படல் வேண்டும். மேலும் காலாவதியான மருந்துகள் ஏதும் சேமிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

(ii) பள்ளி மாணவர்களின் இரத்தவகை, நீண்ட நாள் நோய் சார்ந்த குறிப்புகள், மருந்து ஒவ்வாமை மற்றும் குடும்ப மருத்துவர் போன்ற உடல்நலம் சார்ந்த பதிவுகள் பேணப்பட வேண்டும்.

(iii) ஓட்டுனர் /உதவியாளர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளித்திடவேண்டும்.

**(7) மாணவர்கள் கூடும் நேரங்களில்:**

**ஆய்வகம் :**

i) ஆய்வகத்தில் எரிவாயு உருளைகள் (Gas cylinders) பயன்படுத்தும் போது மாணவர்கள் அவற்றினைக் கையாளாத வகையில் மிகவும் பாதுகாப்பாக காற்றோட்டமுள்ள தனி அறையில் வைத்துப் பராமரிக்கப்படவேண்டும். அவைகளை ஆய்வகத்தில் சேமித்து வைத்தல் கூடாது.

**வளாகம் / வகுப்பறை:**

பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் மற்றும் காலி இடங்களில் கூர்மையான பொருட்கள், துருப்பிடித்த ஆணிகள், கம்பு போன்றவைகள் அகற்றப்பட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். விளையாட்டுக் கருவிகள் உடைந்த நிலையில் ஒட்டப்பட்டதாகவும் துருப்பிடித்தும் திருகு கழன்ற நிலையில், உராய்வு (Lubrication) இன்றி இருப்பின் உடனுக்குடன் மாற்றப்படவேண்டும். விளையாட்டு வகுப்பு துவக்கத்தில் உடற்கல்வி ஆசிரியர் விளையாட்டு கருவிகளை சரியாக உள்ளதா ? என சரிபார்த்தப் பிறகே விளையாட அனுமதிக்க வேண்டும். எக்காரணத்தினை முன்னிட்டும் வில் விளையாட்டு ஆசிரியர் துணையின்றி விளையாடக்கூடாது. வீர விளையாட்டுகள் பள்ளி நிலையில் அவசியம் இல்லை. பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட விளையாட்டுகளை விளையாடும் சமயம் தகுந்த பாதுகாப்பு / முதலுதவி வசதியுடன் மாணவர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போகாதாபடி எச்சரிக்கையுடன் பார்த்து கவனமாக விளையாட வேண்டும்.

ii) உணவு இடைவேளையின்போது குழந்தைகள் ஆரோக்கியமான முறையில் அமர்ந்து மதிய உணவு சாப்பிடுகிறார்களா என்பதை மேற்பார்வையிடவேண்டும்.அதற்கான வசதி ஏற்படுத்தி இருக்க வேண்டும். வகுப்பில் உள்ள வருகை புரிந்த மாணவர்கள் குழந்தைகள் அனைவரும் பள்ளியைவிட்டுச் சென்றுள்ளனர் என்பதனை அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் (சிறு இடைவேளை, உணவு இடைவேளை, உடற்கல்வி வகுப்பு பள்ளி நேரம் முடிந்த பிறகும்) உறுதி செய்த பிறகே பள்ளியைவிட்டுச் செல்ல வேண்டும்.

iii) பள்ளி முடிந்தவுடன் மாணவர்களிடையே ஏற்படும் நெரிசலைத் தவிர்க்க மாடிப்படிகள், நுழைவாயில் ஆகிய பகுதிகளில் மாணவர்களை ஆசிரியர்கள் ஒழுங்குபடுத்த வேண்டும். மாணவர்கள் வெளியேறும் பகுதி போக்குவரத்துச் சாலையாக இருப்பின் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தி மாணவர்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்த தக்க முன்னேற்பாடுகள் செய்திட வேண்டும்.

iv) சிறுநீர் இடைவேளை மற்றும் உணவு இடைவேளை நேரங்களில் மேல்தளங்களில் மாணவர்களை ஆசிரியர்கள் ஒழுங்குபடுத்த வேண்டும்.

v) மாணவர்கள் / குழந்தைகள் தங்களது காலணிகளை வகுப்பில் ஓர் ஓரமாக கழட்டி வைத்துவிட்டு மீளவும் அணிந்து கொள்ளும் சமயம் காலணிக்குள் ஏதேனும் விஷப்பூச்சிகள் சென்று தங்கி இருந்திருப்பின் அக்குழந்தையின் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திடவேண்டும். காலணிகளை முடிந்தவரை கழட்டாமல் இருப்பது நலம்.

vi) பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 1500 க்கு மேல் இருப்பின் முறையான முழுநேர மருத்துவ சேவை வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

**(8) வாகனம்**

வாகனங்களை இயக்குவது பள்ளி நிர்வாகங்களின் சொந்த பொறுப்பாகும். மாணவர் / மாணவியர் பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பாக 31.8.2012 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் உள்துறையால் வெளியிடப்பட்டுள்ள (வரைவு விதிகள்) ''தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள் 2012''–ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை அனைத்துப் பள்ளிகளும் உரிய அரசாணை வெளியிடப்பட்ட பின்னர் அவ்வரசாணை பின்பற்றப்பட வேண்டும்.

**(9) அன்னையர் பள்ளிப் பார்வைக் குழு**

அரசு அதிகாரிகள் அல்லாது தத்தம் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் என்னென்ன வசதிகள் உள்ளன, என்னென்ன வசதிக் குறைபாடுகள் உள்ளன, முறையான பராமரிப்புகள் செய்யப்படுகின்றனவா என்பதை பள்ளியின் நுகர்வோரான பெற்றோரே நேரில் சென்று சமூக ஆய்வு (Community Inspection) என்ற வகையில் பார்த்து குறைபாடுகளை நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வது அதிகபட்ச நலம் பயக்கும் எனக் கருதப்படுகிறது. இவ்வகையில்

i) மாணவ / மாணவியரின் தாய்மார்கள், வாரத்தில் ஒரு நாள், ஐந்து பேர் கொண்ட குழுவாக சென்று பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளையும் பள்ளி வேலை நாட்களில் பார்வையிட அனுமதித்தல் வேண்டும். இவர்களின் பார்வைக் குறிப்புகள் ஒரு பார்வைப் புத்தகத்தில் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டும். தாய்மார்களைத் தேர்வு செய்யும்போது கீழ்க்கண்டவாறு பல்வேறு வகுப்புகளில் இருந்தும் பிரதிநிதிகள் உள்ளடக்கியவாறு அமைதல் வேண்டும்.

**வகுப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | மழலையர் வகுப்பு | 1 நபர் |
| 2. | 1 ம் வகுப்பு முதல் 3 ம் வகுப்பு வரை | 1 நபர் |
| 3. | 4 ம் வகுப்பு முதல் 5 ம் வகுப்பு வரை | 1 நபர் |
| 4. | 6 ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்பு வரை | 1 நபர் |
| 5. | 11 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை | 1 நபர் |

i) ஒரு முறை பார்வையிட்ட குழுவைச் சேர்ந்தவர்களே திரும்பவும் பார்வையிடும் வண்ணம் இருத்தல் கூடாது. பிரதிநிதிகள் குலுக்கல் முறையில் (Random method) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் பாரபட்சம் ஏதும் இருத்தல் கூடாது.

ii) பள்ளியில் உள்ள கழிப்பறை, குடிநீர் வசதி, ஆய்வக வசதி, கணினி வசதி, நூலக வசதி, விளையாட்டு வசதிகள், வகுப்பு அறை வசதிகள் போன்ற எல்லா வசதிகள் சார்ந்து பள்ளியின் அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டு இவர்கள் தமது பார்வைக் குறிப்பைப் பதிவு செய்தல் வேண்டும். இக்குழுவின் பார்வைக் குறிப்புகளை ஒவ்வொரு வாரமும் பார்த்து குறைபாடுகள் உள்ள இடங்களில் அதனைச் சரி செய்ய தாளாளர் / செயலர் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர் நடவடிக்கைகள் குறித்த குறிப்பு எழுதப்பட்டு அதில் தாளாளர் / செயலர் ஒப்பமிடப்பட வேண்டும். பார்வையின் போது முதல்வரோ அல்லது அவரின் பிரதிநிதியோ உடனிருக்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர்கள் (மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் வழியாக)

நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வி, விளையாட்டு
(ம) இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள்
(ம) சிறைச்சாலைகள் துறை) முதுநிலை தனிச்செயலாளர், சென்னை–9.
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, சென்னை–9.
விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை, சென்னை–9.
உயர்கல்வித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

# “மோதல் சாவு”களும் குழந்தைகளின் மௌனம் சொல்வதும்

–ப்பாரா பரூக்கி

சென்ற இதழின் தொடர்ச்சி...

**மறைந்து கிடக்கும் பாடத் திட்டங்கள்:**

இவ்வாறாக வெளிப்பட்டு தெரியும் விவரங்கள் அல்லாத சில சில குழுக்களை ஒத்துக்கொள்ளுதல் மற்றும் ஒதுக்கி வைத்தல் போன்றவற்றுக்கு மறைமுகக் காரணங்களும் உள்ளன. பள்ளியில் நடக்கும் ஒரு சில சம்பிரதாயச் சடங்குகளான காலையில் பள்ளி கூடுதல் (Assembly) பள்ளியில் கொண்டாடப்படும் சில பண்டிகைகள், விழாக்கள் அவ்வளவு ஏன் பள்ளியின் சுற்றுச்சூழல் கூட குழந்தைகளை அந்நியப்படுத்திவிடலாம். சமீபத்தில் நான் ராஷ்டிரீய பிரதியா விகாஸ் வித்யாலயா என்னும் பள்ளியில் என் மாணவர்களை அவர்களின் ஆசிரியப் பயிற்சியை மேற்பார்வை இடுவதற்காகச் சென்றிருந்தேன். இரண்டு சிலைகள் சரஸ்வதியினுடையது, கிருஷ்ணா மற்றும் மற்ற பெண் தெய்வங்கள் அவர்களைச் சுற்றி விளக்குகள் கோலங்கள் என பள்ளி முதல்வரின் அலுவலகத்தைச் சுற்றி அலங்கரிக்கப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட மதச் சடங்குகள் சின்னங்கள் போன்றவற்றுக்கு “அலுவலக அங்கீகாரம்” பெற்று பள்ளி நாளேட்டிலும் குறிக்கப் பெற்றுள்ளன. சில பள்ளிகளில் தேர்வு முன்பு சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆனால், பிற மதங்களைச் சேர்ந்த சடங்குகள், சின்னங்களுக்கு அவை தரப்படுவதில்லை. இது வேண்டுமென்றே நடக்கிறதா அல்லது கவனமின்மையா காரணம் எதுவென்று தெரிவதில்லை. குழந்தைகள் தங்கள் மதச் சின்னம் சின்ன வயதிலிருந்தே பொதுச் சின்னங்களோடு ஐக்கியப்படுத்தியோ வேறுபடுத்தியோ பார்க்கத் துவங்குகிறார்கள் (குப்தா 2008) தங்கள் மதச்சின்னங்கள் இப்படி ஒத்துக் கொள்ளப்படாதபோது அவர்கள் தங்கள் கலாச்சாரத்தைப் பற்றியோ அல்லது கலாச்சார சின்னங்களைப் பற்றியோ தாழ்வு மனப்பான்மை கொள்ளத் துவங்குகிறார்கள். (Bigler et al 2001)

ஒரு குழந்தை கூறியது எப்போதும் ஒரு ஆசிரியர் தன் பெயரை சொல்லி அழைத்ததில்லை. ஆனால், “முகமது”, “மியான்” அல்லது “மௌலானா” என்றுதான் அழைப்பார் என்று. அதே ஆசிரியர் அக்குழந்தையின் அம்மாவை பார்க்க நேர்ந்தபோது ஆச்சரியம் தன் குரலில் தொனிக்கக் கூறினார்; “ஒ! உன் அம்மா தன் தலையில் முக்காடிட்டுக் கொள்ளவில்லை என்று”. இந்த வார்த்தைகள் அக்குழந்தையின் மனதில் அதுவும் நடுத்தர வர்க்க பின்னணியிலிருந்து வரும் அக்குழந்தை தன் குடும்பம் மிக “பின் தங்கியதாக” கருத நினைத்ததை காரணமில்லாமல் என்று கூறிவிடமுடியாது அதேபோல் தன் ஆசிரியர் தன்னுடைய சமூகப் பின்னணி, மொழி, மதம், கலாச்சாரம் பற்றி ஏற்கெனவே ஒரு உரு கொண்டு வைத்திருப்பதை இல்லையென்றும் சொல்ல முடியாது.

இப்படி 'ஒரே மாதிரி' என்று வளர்வது அல்லது நம்புவது “குழு–நடந்து கொள்ளும்” முறைக்கு தள்ளிவிடக் கூடும் (ஜோஸ்ட் மற்றும் ஹாமில்டன் 2005) மற்றும் அது பொருளாதார சமூக சமத்துவமின்மையை பற்றி கருத்தில் கொள்ளாது (ஜில்பான் 2008). ஒரே வகையான குழு என்பது தீர்ப்பு மற்றும் நடவடிக்கைகளை அது ஆசிரியர்களே ஆனாலும் மாற்ற வைக்கும் அப்படி ஆகும்போது குழந்தைகளை தொந்தரவாளர்களாக நினைக்க வைக்கும்; பின்னடைவு மற்றும் பிற்போக்காளர்களாக கருத வைக்கும் குழந்தைகளையோ குற்றவுணர்வில் குன்றிட வைக்கும். மேலும், சரியாகப் படிக்கவிடாது குறைந்த மன, உடல் நலமுடையவர்களாக உருமாற்றும் (பாட்டின் 1999, ஜில்பான 2008, மக்கொலான் மற்றும் அரோன்சன் 2006, காமிசியா 2007) இப்படி பெயரிட்டழைத்தல் குழந்தைகளின் தன்மானத்தை உடைக்கும். தன் வயதொத்தவர்களுடன் பழகும்போது குழந்தைகள் மறுகுவர். “எல்லா பயங்கரவாதிகளும் முஸ்லீம்கள், ஆனால், எல்லா முஸ்லீம்களும் பயங்கரவாதிகல்ல” என்பது போன்ற கூற்றுகளை மிகவும் படித்த மனிதர்கள் கூடக் கூறுகின்றனர். எனவே, இது குழந்தைகளை பெருமளவு பாதிக்கும்; அவர்களின் அடையாளங்கள் குறித்து ஐயங்கொள்ளச் செய்வதோடு சமூகக் குழுக்களுடன் உறவாடுதலைத் தடை செய்யும்.

பல இனத்து மக்களின் பிரதிநிதிகளாக அரசுப் பள்ளிகளில் அதுவும் ஜாமியா நகர் பகுதிகள் போன்ற இடங்களில் கிடைப்பது அபூர்வத்திலும் அபூர்வம். ஏனெனில், முஸ்லீம்கள் சமூகப் பொருளாதார அடிப்படையில் பின்தங்கியவர்களாக இருப்பதனால் (சாச்சார் குழு 2006) அவர்களின் ஜனத்தொகை “நல்ல தரமான” தனியார் பள்ளிகளில் மிகக் குறைவாக தானிருக்கிறது.

வேறுபட்ட இனமக்களிடையே கலந்துறவாடல்கள் குறைவாயிருக்கும்போது ஊடகங்கள் மக்களின் மீது ஒரு

வகையான அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதிலும் அவைகளின் உத்தி (யுக்தி)யான திரும்பத் திரும்ப கூறுதல், பொறுக்கி எடுத்து அதையே வலியுறுத்திக் கூறுதல், அழுத்தமாய் அதுதான் சரி என்பதுபோல் அடித்துச் சொல்லி (அழுத்தி) ஒரு கருத்தை உள் வாங்க வைத்தல் போன்றவற்றின் மூலம் முஸ்லீம்களை அவர்கள் இயல்பிலேயே முரடர்கள் மூர்க்கர்கள் என்பதுபோல் சித்தரிக்கின்றன. (ஹூசைன் 2000) ஜினாப்தி (2009) போன்றவர்கள் சுட்டிக்காட்டுவதுபோல பிரபல ஹிந்தி சினிமா பாலிவுட் – போன்றவைகள் முஸ்லீம்களை கடத்தல் காரர்கள், கொலை செய்யும் கூட்டம், அடியாட்கள் என்பதுபோல் காட்டுகின்றன. மிகச் சமீபகாலத்துக்குமான அமிர் மற்றும் ஃபன்னா திரைப்படத்தில் முஸ்லீமை பயங்கரவாதியாக காட்டுகின்றனர். நைய்யார் (2009) சொல்வது கவனிக்கத்தக்கது. அதாவது எந்தெந்த மாநிலங்களில் வலதுசாரிக் கட்சிகள் ஆட்சியில் இருக்கின்றனதோ அங்கு எல்லாம் ஊடகங்கள் முஸ்லீம்கள் மீது கடுமையாக இருக்கிறார்களாம். எனவே, இதுபோன்ற பிரச்சாரங்கள் முஸ்லீம்களை அடிப்படைவாதிகளாய் காட்டி சமூக அரசியல் தளங்களில் சமத்துவத்துக்கான தம்பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கின்றனர்.

### 3. ஜனநாயக நிகழ்வுகள், நீதி மற்றும் நம்பிக்கை

இதுபோன்ற ஜனநாயக நிகழ்வுகளின் மூலம் குழந்தைகள் தங்கள் புரிதல்களை சரிபார்த்துக் கொள்வதோடு இந்த நிகழ்வுகள் அவர்களுக்கு மாறுபட்ட சூழ்நிலையின் காரணமாக புதிய கண்ணோட்டத்தையும் பெறுகின்றார்கள். இந்தப் பகுதி எப்படி ஜனநாயக நிகழ்வுகள் அந்நியமாய் உணர்ந்த குழந்தைகளிடம் நம்பிக்கை மற்றும் நீதிக்கான உணர்வை வளர்த்திருக்கின்றன என்பதை ஜாமியா நகர் குழந்தைகள் ஒரு பொதுவிசாரணை அல்லது மக்கள் மன்றத்தினை பற்றி (Public hearing) தங்கள் கருத்தைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் அறியலாம். ஜாமியா நகரில் நிகழ்ந்த ''மோதல் சாவு''க்குப்பின் குடிமக்கள் உரிமை குழு ஒன்று இந்த பொது விசாரணையை ஏற்பாடு செய்திருந்தது. அதுபற்றி குழந்தைகளின் கருத்துக்களை கேட்டறிந்த விவாதத்தில் என் பங்கு என்பது மிகக் குறைவானது. சில கேள்விகளை நான் கேட்டதன்றி வேறொன்றுமில்லை.

பொது விசாரணையை பற்றிய விரிவான தெளிவான கலந்துரையாடலுக்குப் பிறகு இரண்டரை மணி நேரம் விவாதம் நடைபெற்றது. அந்த இரண்டரை மணி நேர விவாதம் இதுபோன்ற ஜனநாயக ரீதியான நிகழ்வுகள் அதன் விவரணம் போன்றவைகள் நீதி கிடைப்பதற்கான மாற்றுவழிகள் இருப்பதனை வைத்து குழந்தைகள் மனதில் நம்பிக்கை துளிர்கிறது தெரிகிறது. வேறுபட்ட பின்னணியில் உள்ள மக்கள் திரண்டு நீதி கிடைக்கும் வழிக்காகப் போராடுவதை காணும் குழந்தைகள் அதிசயிக்கத்தக்க நம்பிக்கை கொள்கிறார்கள். அவர்கள் நடத்திய அந்த விவாதம் அவர்களுக்கு எப்படி ஜாதி. ஆண்/பெண் மற்றும் வர்க்க வித்தியாசங்கள் மற்றும் மதபேதத்தை மீறி நீதி வரமுடியும் என்பதைக் கண்டு கொள்ள உதவியது. இதுவரை மதம் என்பது மீறிவர முடியாதது என்பதாக அவர்கள் கருதியது இன்று வரை இருந்தது என்பது உருவாக்கப்பட்டதுதான். அது இயல்பானது என்பதல்ல என்பதைப் புரிந்து கொண்டதால் வந்த நம்பிக்கை அது. அப்படி உருவாக்கப்பட்டதை அப்படியே பலர் உள்வாங்கியதால்தான் முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கு காரணமும் ஆகும்.

இக்குழந்தைகளுக்கு பிற்பல முஸ்லீம் அல்லாத குழந்தைகள் பள்ளியில் நண்பர்களாக இருக்கிறார்கள். மிக நெருக்கமான நண்பர்களும் கூட. இவர்கள் ''எல்லா இந்துக்கள்'' போல் அல்லாமல் மாறுபட்டிருக்கிறார்கள் என இக்குழந்தைகள் நினைக்கிறார்கள். இவர்கள் பொதுவான உரையாடல்கள், சினிமா, இசை மற்றும் காட்சிகள் மூலமாக தங்கள் ''இமேஜ்'' மற்றும் ''பிறர் இமேஜ்''களை உடைக்க வேண்டும். இந்த பொது விசாரணை அங்குள்ள முஸ்லீம்களுக்கு பொது இடங்களில் பேச அதாவது தங்கள் குரல் எழுப்ப வாய்ப்பு கொடுத்திருக்கிறது. இதை இந்த குழந்தைகள் பார்த்ததால் குழந்தைகளும் தங்கள் தயக்கம் மற்றும் மௌனத்தை கலைக்க ஓரளவு உதவி இருக்கிறது.

சமுதாய அமைப்பின் மீதே நம்பிக்கை இழந்து போயிருந்த குழந்தைகள் இந்த பொது விசாரணை மூலம் ஓரளவுக்கு மாற்றங்கள் நிகழ முடியும் என்று குழந்தைகள் நம்பத் துவங்கி இருக்கிறார்கள். பொது விசாரணையில் பேசியவர்கள் அல்லது சாட்சியங்கள் கூறியவர்கள் ''பாதிக்கப்பட்டவர்களுக்காக'' சட்டப்பூர்வமாக என்ன நடந்தது. ஆனால், என்ன நடந்திருக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறினர்.

சில குழந்தைகள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் கண்ணோட்டங்களையும் பகிர்ந்து கொண்டனர். சிலர் தாமாக முன்வந்து ஊடகங்களின் செய்தி அறிக்கைக்கு மாற்றாக உண்மை அறியும் குழுவை உருவாக்கி புதிய ஒரு அறிக்கை தயாரிக்கலாம் என்றும் ஆலோசனைகள் கூறினர். இவ்வாறாக அநீதியான முறையில் நடந்து முடிந்த நிகழ்வுக்கு மாற்றுவழி கண்டிட எண்ணியது மற்றும் மேற்கொண்டு எப்படி எல்லாம் செய்திடலாம் என்று சிந்திக்க வைத்தது. இது ''எதுவுமில்லை இனி''

என்று கையைகட்டி மூலையில் உட்காரும் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலைக்கு மாற்று ஆனதும் கூட என்று சொல்லலாம். நீதி கிடைக்கப் பெறுவதற்காக அழுத்தம் கொடுக்கும் வழி முறைகள் மற்றும் மாற்று யுக்திகள் போன்றவை பொது விசாரணையில் பேசப்பட்டதால் குழந்தைகளுக்கு அரசு யந்திரங்கள் மூலமாக மட்டுமல்லாமல் வேறு வித யுக்திகள் மற்றும் பிற யந்திரங்கள் மூலமாகவும் நீதிக்காக போராடலாம். நீதி கிடைக்கலாம் என்பதை புரிந்து கொண்டார்கள். இது அந்த வளரிளம் குழந்தைகளிடையே நம்பிக்கையை வளர்த்ததுமில்லாமல் தாங்களும் மாற்றத்துக்காக பாடுபடும் காரணிகளாக மாறிடலாம். நீதியுள்ள சமுதாயம் படைக்கலாம் என்றெல்லாம் யோசிக்கத் தூண்டியது. தங்களுக்கு சட்ட அமைப்பு பற்றி அதிகம் தெரியவில்லை என்பதை உணர்ந்து கொண்டதுடன் அறிந்து கொள்வதன் மூலம் தங்கள் உரிமையை அறிந்து கொள்ளலாம். உரிமை அனுபவிக்கலாம் என்பதோடு பாதிக்கப் பெறும் நபர்களுக்கு உதவியும் செய்திடலாம் என்று நம்பத் துவங்கினர். ''அரசாங்கம்'', ''சட்டம்'' மற்றும் ''காவல்துறை'' போன்ற வார்த்தைகளை மாறி மாறி உபயோகித்ததுடன் அவற்றுக்கு இடையிலான உறவு முறைகளையும் புரிந்து கொள்ள முயற்சி செய்தனர்.
காவி உடை அணிந்தாலும் பொது மக்களின் செயல்பாட்டாளராக செயல்படும் சுவாமி அக்னிவேஷ் பற்றியும் பேச்சு மற்றும் விவாதம் நடந்தது. இது அவர்களின் புரிதலான மதவாதிகள் என்பவர்கள் அரசியல் பேசுவதில்லாமல் இருப்பதோடு மக்களை அதிகாரம் பெறச் செய்ய எதுவும் செய்வதில்லை என்னும் கருத்தினை அவர்களே கேள்விக்குட்படுத்திக் கொள்ள ஏதுவாய் இருந்தது. குழந்தைகள் மேலும் பேச்சுக்கான மற்றும் கருத்துக்களை தெரிவிப்பதற்கான உரிமை பற்றியும் விவாதித்ததோடு சாதாரண மக்கள் அதனை செயல்வடிவில் காட்ட அல்லது காட்டும் அதிகாரம் உண்டா என்பது பற்றியும் விவாதம் நடத்தினர்.

பல குழந்தைகள் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ள முயன்றதோடு வேறு விதமாகவும் யோசிக்கலாயினர். குஜராத் அரசாங்கம் அமீர்கானின் படமாகிய பின்னர் ஃபன்னா (Fanaa) வையே திரையிட மறுப்புத் தெரிக்கும்போது சாதாரண மக்களால் தங்கள் உரிமையை நடைமுறைப்படுத்த எவ்வளவு சிரமப்பட வேண்டும் என்று யோசித்தனர். அரசை மட்டும்தான் அவர்கள் இந்த உரிமையை காட்டிக் கேள்வி கேட்க முடியுமா அல்லது பிற அமைப்புகளை அதாவது வீடு, பள்ளி போன்றவற்றை கூட கேள்வி கேட்க வழியுண்டா என்றெல்லாம் கேட்கலாயினர். பள்ளியில் உள்ள அதிகாரிகளிடம் தாங்கள் புகார் அளித்தால் என்ன நடக்கும், அப்படி புகார் அளிக்கும்போது ஆதிக்கம் செலுத்தாத ஆசிரியர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்று விவாதித்தனர். பலர் ''மரியாதை'' மற்றும் ''ஒழுக்கம்'' என்ற பெயரில் தங்கள் வீடுகளில் தங்கள் உரிமைகள் மீறப்படுபதாகக் கூறினர். குடும்பம் மற்றும் பள்ளிகளில் மற்ற குழந்தைகளுக்கு குடும்பம் மற்றும் பள்ளிகளின் ஆக்கிரமிப்பு பற்றி கற்றுத்தர வேண்டும் என்று கூறினர்.

பாட்லா இல்ல (Bafla house) நிகழ்வினில் அரசு சிலரை கதாநாயகர்களாகவும் சிலரை வில்லன்களாகவும் நடந்த சண்டை ஏதோ ''தர்மத்துக்கான'' போர் போலவும் அதன் விளைவுதான் மோதல் சாவு என்பது போலும் புகழ்ந்து தள்ளியது. நகர் எங்கும் சுவரொட்டிகள் அதில் செத்த போலீஸ் அதிகாரி ''தேசத்தை எதிர்களிடமிருந்து காத்ததாக'' சுலோகங்கள் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

பெரிய குழுக்களாக இருப்பதற்காகவும் அதில் தாங்கள் ஒன்ற முடியாது இருப்பதை வெளிப்படுத்திய அதே நேரத்தில் பொது விசாரணை அந்த முரண்பாட்டை எப்படி சரி செய்து கொள்வதென்பதையும் சொல்லித் தருகிறது. அதாவது அரசு சாசனத்தை, அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டே சிறந்த தேச பக்தர்களாக நாட்டுப்பற்றாளர்களாக திகழ முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்தியுள்ளது. நாட்டின் குடி மக்களாக இருந்து கொண்டே அரசின் செயல்பாட்டை விமர்சித்து தவறாக நடக்கவிடாமல் தடுப்பது தம் பங்களிப்பும் கடமையுமாகும் என்று உணர்ந்துள்ளனர். ஆரோக்கியமான அவநம்பிக்கை அரசின் மீது கொள்வதன் மூலமும் விமர்சிப்பதன் மூலமும் மனித நேயமுள்ள மக்களாக மிளிர முடியும் என்று நம்புகின்றனர்.
குழந்தைகள் பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையானவர்கள் மற்றும் ஜனநாயகம் போன்ற வார்த்தைகளுக்கிடையில் உள்ள நுணுக்கமான வேறுபாடுகளை புரிந்து கொள்ள மிகவும்தான் சிரமப்பட்டார்கள்.

குழந்தைகளின் ஆர்வம் அவர்களின் அறிவுபூர்வ அணுகுமுறையைக் கூர்மைப்படுத்துகின்றது. (பாபேபிரயா மற்றும் மக்கெடென 1995) ஏனென்றால் அவர்கள் பலவிதமான விசயங்களை சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஜாமியா நகர் குழந்தைகள் இந்த நிகழ்வு, தங்கள் சொந்த அனுபவம் இவற்றோடு சமூக அரசியல் நிதர்சனங்களை இணைத்துப் பார்க்க முடிகிறது. ஆனால், இந்த இணைப்புகள் சில சமயங்களில் அறியாமை மிகுந்ததாக இருக்கிறது. இந்த அறியாமை அவர்களினம் பற்றிய பிரச்சாரத்தின் காரணமாக கூட உருவாகி இருக்கலாம். நாட்டில் சிலரை குடிமக்கள் காவலர்களாகவும் சிலரை அவர்களுக்கு எதிரிகளாகவும்

காட்டியதோடு, கேள்வி கேட்பது குடிமக்கள் தன்மை இல்லாததுபோலவும் பிரச்சாரங்கள் நடைபெற்றது. இதுபோன்ற பிரச்சாரங்கள் மக்களை எளிதில் தொற்றிக்கொள்கிறது. இராணுவம் காவல்துறை பணி என்பது என்னவோ நாட்டைக் காக்க என்பதாகவும் அவர்கள் தேசியவாதிகள் என்பது போலும் அவர்கள் கொன்றவர்களெல்லாம் தேச எதிரிகள் போலவும் சித்தரிக்கப்படுகிறார்கள். பாடத்திட்டமும் மறைமுகமாக இதையே செய்கிறது. பள்ளியில் நடக்கும் காலை அசெம்பிளியில் (School Assembly) தனில் நடைபெறும் செய்தி வாசிப்பு அதையொட்டி சம வயது சிறுவர்களின் விமர்சனம் என்பவை இதைத்தான் மறைமுகமாக செய்கின்றது. இந்த நிகழ்வுப் போக்கின் காரணமாக சிலருக்கு "குடிமக்கள்" பட்டம் கொடுக்கப்படுவதும் அதுவே சிலருக்கு மறுக்கப்படுவதுவாகவும் இருக்கிறது.

இதுபோன்ற விவஸ்தையற்ற பிரச்சாரங்கள் பயங்கர முரண்பாட்டை சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த குழந்தைகளின் மனதில் தோற்றுவித்தது. மேலும் ஜாமியா நகர் குழந்தைகள் தாங்கள் இந்தியர்கள் என்பதற்காக பெருமை கொள்வதோடு இந்திய அடையாளங்கள் தேசிய சின்னங்கள் போன்றவற்றை எண்ணி பெருமிதம் கொள்ளும் அதே நேரத்தில் "வேலை செய்பவர்கள்" அத்துமீறி செயல்படுவதை சில சமயம் அவதூறு தூதுவர்களாக செயல்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாமலும் தவிப்பது தெரிகிறது. இதுகாரணமாக தங்களை நல்ல குடிமக்களாக ஏற்றுக்கொள்வார்களா என்னும் பயமும் நாமெல்லாம் "நாட்டுப்பற்றில்லா"தவர்களா என்று கேட்கவும் செய்கிறார்கள். சிலரின் தர்மசங்கடமாக நிலைமை கீழ்கண்டவாறு வெளிப்படுகிறது.

தம் மதத்தினுடைய அந்தஸ்து மற்ற மதத்தினருடைய மற்றும் ஜாதியினால் எழும் அந்தஸ்து போன்றவற்றை புரிந்துகொள்ள முயற்சிக்கும்போதே நடைமுறையில் அவர்கள் பார்க்கும் இனஞ்சார்ந்த பிரச்சாரமும் இனப்பிரினைவாதமும் அவர்களை குழம்பிட வைக்கும். எனவே குழந்தைகள் சரியாகப் புரிந்து கொள்ள பிரச்சனைகளை இனங்கண்டு கொள்ள சொல்லபோனால் கொள்கையின் அடிப்படையில் பிரிவினைவாதப் பிரச்சனையை புரிந்துகொள்ள உதவுவது மிக முக்கியமானதாகும். அதிலும் அவர்களின் சொந்த அனுபவ அடிப்படையில் புரிந்துகொள்வது அவசியம். அதிகாரம், அடுக்குமுறை அமைப்பு மற்றும் சுயநலத்தின் வெளிப்பாடு என்பவற்றைப் பற்றி அறிந்து கொள்வதும் அது எப்படி சமமின்மையை கட்டிக்காக்க உதவுகின்றது என்பதைப் புரியவைக்க வேண்டும். அஸ்கர் அலி இன்ஜினியர் சொல்வது போல இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான பிணக்கு என்பது மதம் சார்ந்தது அல்ல. அது சமூக, பொருளாதார அரசியல் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும்; மதக் கொள்கையின் அடிப்படையில் தான் காணப்பட வேண்டும்; (Engineer 2006)

இதுபோன்ற அரசியல் சார்ந்த விசயங்கள் வகுப்பறைகளில் கற்பிக்கப்படம்போது அது அதன் நிகழ்வுப் போக்கும் அரசியல் சார்ந்ததுதான். ஏனென்றால் அதிகாரம் என்பது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையில் நிலவுவது மட்டுமல்ல. மாணவர்கள் மத்தியில் கூட நிலவிடக் கூடும் (பைன் – Fine 1993) இந்த நிகழ்வுப் போக்கில் சில மாணவர்கள் மௌனம் ஆக இருக்கத் துவங்கி இரண்டாம்பட்சமாக உணரத் தலைப்படலாம். சில மாணவர்கள் பலம் பெற்றவர்களாகி வாய்ப்பு பெற்றவர்கள் ஆகிவிடக்கூடும். குழந்தைகள் தேவையான அளவு, தன்னம்பிக்கை உடையவர்களாக இருக்கும்போதுதான் தாங்கள் மதிக்கப்படுவார்கள் என்று உணர்ந்து தாங்கள் பேசுவதும் கேட்கப்படும் என்று உணர ஆரம்பிக்கும்போதுதான் விவாதங்களில் பங்கேற்க முற்படுவார்கள்.

மெலிந்த குரல்களை கேட்டு அதிகம் கேட்கப்படாதவர்களிடம் பேசி அவர்களை அவர்கள் கருத்துக்களை முன்னுக்கு கொண்டு வருதல் பள்ளியில் நிகழ வேண்டும். அப்போதுதான் பொதுவான நம்பிக்கை மற்றும் அரசாங்கத்தின் அழுத்தமான குரல் (சில சமயங்களில் மற்ற குரல்களை எழும்பவிடாமல் செய்துவிடும் குரல்) என்பதற்கு மாற்றானது என்பதுவும் ஜனநாயகத்தை உண்மையில் நடைமுறைப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை குழந்தைகளுக்கு உண்டாகும். நலிந்த குரல்களை எப்போதும் வெளியே கேட்கவிடாமல்தான் ஆதிக்கக் குரல்கள் ஒலித்து வந்திருக்கின்றன. தன் கருத்தை விவாதத்தில் சொல்ல முனைந்தபோது. ஒரு ஆசிரியர் காலை நடக்கும் பொது கூட்டத்தில் "மோதல் சாவு" பற்றி கேள்விகள் எழுப்பினார் என்று சொல்லியது. அக்குழந்தைக்கு அது போதுமாய் இருந்தது. அந்த குழந்தைகளின் உணர்வுகளை மதிக்காமல் ஒதுக்கித் தள்ளி இருந்தால் அது அந்த இனத்தைச் சேர்ந்த ஒட்டுமொத்த மக்களின் உணர்வுகளை மதிக்காமல் ஒதுக்கித் தள்ளியதாய் இருந்திருக்கும். மேலும் இவர்களின் அனுபவங்கள் தினசரி அவர்களே அனுபவிக்கும் மற்றும் உடனிருப்பவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் எழுந்த அனுபவங்கள் மற்றும் பலவிசயங்களை தம்மில் பலரோடு விவாதித்தால் எழுந்தவைகளாகும். எனவே பள்ளிகள் பல்வேறுபட்ட கருத்தோட்டங்களின் மேல் கவனம் கொள்ள வேண்டியது மிக முக்கியமானதொன்றாகும். அதிலும்

இனக்கலவரங்கள் மற்றும் அரசாங்கமே நடத்தும் அக்கிரமமான தாக்குதல்கள் பற்றியதான விசயங்களின் மீது அது தேவையானதாகும்.

**மேற்கொண்டு செய்ய வேண்டுவன:**

இறுதியான குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டுமென்றால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உலகத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளுவது மட்டுமல்லாமல் அதை மாற்றுவதற்கான சமூகப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஜனநாயகத்தை நோக்கிய நம் முன்னேற்றப் பயணத்தில் அமெரிக்காவிலுள்ள விஸ்கோன்சின் என்னுமிடத்திலுள்ள ஒரு பள்ளியில் இருந்து நாம் ஓர் உந்துதலைப் பெறலாம். லூா எஸ்கியூலா பிரட்டர்னி (La Escrula Fratney) என்னும் அப்பள்ளியில் பணியாற்றுபவர்கள் மற்றும் குழந்தைகளின் பெற்றோர்கள் இணைந்து வருட முழுவதற்குமான பள்ளியின் புரிதலை பல கலாச்சாரம் மற்றும் இன வெறுப்புக்கு எதிரான கல்வியை அதன் கொள்கைப் பற்றி விவாதித்தல், தெளிவு செய்து கொள்ளுதல் மற்றும் தம் அறிவை ஆழப்படுத்திக் கொள்ளுதல் என்னும் நிகழ்வுப் போக்கில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல் என்பதைச் செய்து வருகிறார்கள். (ஆப்பிள் மற்றும் பினி – Apple and Beane 2006) இந்தப் பயிற்சியை அவர்கள் எப்படிச் செய்து வருகின்றார்கள் எனில் வெள்ளையரல்லாத பிறநிறத்து மக்களின் பங்கு அமெரிக்க வரலாற்றில் எப்படி இருந்திருக்கிறது என்பதிலிருந்து ஆசிரியர்கள் ஆரம்பிக்கிறார்கள். அதிலுள்ள மாற்றத்திற்கான வழிமுறைகளை பாடத்திட்டத்தில் ஒன்றிணைத்து பார்ப்பதோடு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வாழ்வின் முக்கிய நீரோட்டத்தில் உள்ள தொலைக்காட்சி மற்றும் பாடப்புத்தங்கள் போன்றவை எப்படி ஒரே மாதிரியாக அரைத்த மாவையே அரைக்கும் வேலையை செய்து கொண்டிருக்கிறதென்பதையும் அலசி ஆராய்ந்து மேற்கொண்டு செல்லும் வழி பற்றிச் சிந்திக்கிறார்கள். அதேபோல இந்தியாவிலுள்ள பள்ளிகளிலும் தங்களுடைய புரிதல்கள் மற்றும் தொலைக்காட்சி மற்றும் குழந்தைகளின் புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் இவற்றில் காண்பதையும் ஆனால், நடைமுறையில் ஜனநாயகம் மற்றும் மதசார்பின்மை குறித்து அவர்கள் காணும் முரண்பாடுகளையும் அவர்கள் விவாதிக்க வேண்டும். இந்த விவாதத்தில் எப்படி பெரும்பான்மை மக்களின் கலாச்சாரம் "நீரோட்டத்தில்" ஏற்றுக்கொள்ளப்படுகிறதென்பதையும் விவாதிக்க வேண்டும். வெகுஜன நீரோட்ட கலாச்சாரத்தோடு ஒன்றுபடாதவர்கள் எப்படி வெளியேற்றப்பட்டு விடுவதோடு அவர்களின் குரல்கள் வெளியே கேட்காதபடிக்கு அதிகாரம் படைத்தவர்கள் அவர்களை மௌனிக்கச் செய்துவிடுகிறார்கள் என விவாதிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பொய்யானதொரு மதசார்பின்மை என்பது பொதுவாக உருவம் பெற்றிருக்கிறது என்பது தெரியவரும். உதாரணமாக ஒரு பள்ளியில் மூன்று நாள் "உல்லாசப் பயணம்" ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பயணம் ஈத் பெருநாளுக்கு முந்தைய நாளில் துவங்கியதால் அந்தப் பண்டிகையை கொண்டாடுபவர்கள் எவரும் அதாவது சிறுபான்மையினர் கலந்து கொள்ளாதவாறும் அதைப் பற்றி கேள்வி கேட்காத அம்மக்களின் தன்மையை கூறலாம். மதசார்பின்மை என்பது பாடப்புத்தகங்களில் மட்டுமல்ல, பள்ளிகளில் என எப்படி ஏற்கெனவே உள்ள சமமற்ற தன்மையை பிரதிபலிக்கிறது என்பதுமாகும். அதுமட்டுமில்லாமல் அது சமூக மூலதனமாகப் பார்க்கப்பட்டு எல்லோரின் பங்களிப்பும் சமமாகப் பார்க்கப்பட வேண்டும் மற்றும் பள்ளியின் தினசரி நடைமுறையிலும் பின்பற்றப்பட வேண்டும். மேலும் பள்ளியின் கூட்டங்களிலும் பள்ளிக் கொண்டாட்டங்களிலும் பள்ளியின் சுற்றுச்சூழல் மற்றும் மதிப்பீடுகளில் எங்ஙனம் வெகுஜன நீரோட்டக் கலாச்சாரமான ஆதிக்கக் கலாச்சாரம் நிறுவன மயமாக்கப்பட்டு பள்ளியின் பொது விதியாக மாற்றப்படக் கூடாது என்பதை கவனித்தல் அவசியம்.

ஒரே மாதிரியாகச் சொல்லப்படுவதை தவிர்க்க குழந்தைகளை பிறமொழிக் கலாச்சாரம் பற்றி தெரிந்து கொள்ளச் செய்வது மட்டும் போதாது. பிற அமைப்புகள், அதன் கொள்கைகள் என்பது பற்றியும் அவை எப்படி வரலாற்று ரீதியான உருவமைப்புகளை மாற்றியமைக்க முயற்சிக்கின்றது என்பது பற்றியும் தெரிவிக்க வேண்டும். சிறுபான்மை மக்களிடையே பிறந்து சாதனை படைத்தவர்கள் ஒரே மாதிரித் தன்மையை சவாலுக்கு உட்படுத்தினர் என்பதோடு அந்த சிறுபான்மை இன குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையை உருவாக்கி அவர்களைப் போல தாங்களும் சாதனை படைக்க வேண்டும் என்ற உந்துதலை உருவாக்கிடல் வேண்டுவது அவசியமாகும்.

பாடப்புத்தகங்கள் தகுதியான அறிவை வளர்த்துக் கொள்ளும் கருத்துச் சாதனமாகக் கருதப்படுவதால் அவற்றின் மீது ஒரு கண் வைத்திருந்து காக்க வேண்டிய அவசியம் கல்விக்கான மத்திய ஆலோசனைக் கமிட்டி (2005) மாநில அளவிலும் தேசிய அளவிலும் பாடப்புத்தக ஆய்வுக் குழுக்களை ஏற்படுத்த வேண்டியது மிக அவசரத் தேவை என்று கருத்துத் தெரிவித்திருந்தும் கூட இதுவரை அதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. மேலும் இந்த ஆய்வுக் குழுக்கள்

சுதந்திரமானவையாகவும் குடிமக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியிருந்ததும் கவனிக்கத்தக்கது. அவர்கள் சாமான்ய மக்களின் அமைப்புகளில் அமர்ந்து அவர்களின் கருத்துக்களை கேட்டு அறிய வேண்டும். அதேபோல் அவர்கள் அளிக்கும் புகார்களும் பதிவு செய்யப்பட வேண்டும். அப்படி அமைக்கப்படும் ஆய்வுக்குழுக்கள் தங்கள் புரிதலை அவ்வப்போது சீர் செய்து கொள்ள நிலை குழுக்களை (Standing Committee) ஏற்படுத்தி அவை மத்திய கல்வி ஆலோசனை கமிட்டி மற்றும் தேசிய பாடப்புத்தகக் குழு வழிகாட்டுதல்களின்படி அவ்வப்போது ஆய்வுகள் மற்றும் மீளாய்வுகளில் ஈடுபடலாம்.

இந்த முழுக் கட்டுரையும் மொழிபெயர்க்கப்படவில்லை. சுருக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கட்டுரையின் ஆசிரியர் ப்பாரா பரூக்கி (Farah farooqui) ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புதுடில்லியின் கல்வித்துறையில் பணியாற்றி வருகிறார். அவரின் மின் அஞ்சல் முகவரி farah.faroogi@rediffmail.com

## REFERENCES

Howarth, C (2006): "A Social Representation Is Not a Quiet Thing: Exploring the Critical Potential of Social Representatives Theory", British Journal of Social Psychology, 45(1), pp 65-86.

Hussain, M (2000): "Islam, Media and Minorities in Denmark", Currect Sociology, 48 (4): 95-116, Sage Publications.

Jinabade, M (2009): "Bollywood Films with Special Reference to Urdu Politics and Muslims" in Ather Farooqui (ed.)*, Muslims and Media Images – News Views,* Oxford University Press.

Joffe, H, C Staerkle (2007): "The Centrality of Self Control Ethos in Western Aspersions Regarding Outgroups: A Social Representation Approach to Stereotype Content", *Culture and Psychology,* 13:395-418.

Joshi, MV, J C Baker and C Tanaka (2004): "Names Will Never Hurt Me?", *Harward Educational Review,* Vol 74, No.2.

Jost, J T and D L Hamilton (2005): "Stereotypes in Our Culture" in J F Dovidio et al (ed.), *On the Nature of Prejudice, Fifty Years After Allport,* Blackwell Publishing.

Major, B and S B Vick (2005): "The Psychological Impact of Prejudice" in J F Dovidio et al (ed.), *On the Nature of Prejudice, Fifty Years After Allport,* Blackwell Publishing.

McGlone, M S and j Aronson (2006): "Stereotype Threat, Identity Salience and Special Reasoning", *Journal of Applied Development Psychology,* 27, pp 486-49.

Nayyar, K (2009): "Muslims and the Indian Press" in Ather Farouqui (ed.), *Muslims and Media Images: News versus Views,* Oxford University Press.

National Council for Educational Research and Training (2000): National Curriculum Frame work, NCERT Publication.

- (2005 and 2007): *Social and Political Life* (I,III), NCERT Publication.

- (2006): *Looking Around: Environmental Studies,* Textbooks for Class IV, NCERT Publication.

National Council for Educational Research and Training, National Curriculum Framework (2005): NCERT.

Ogbu, J U (2003): "Black American Students in an Affluent Subrub: A Study of Academic Disengagement" (London: Lawrence Erlbaum Associates)

Parekh, B (2007): "Composite Culture and Multicultural Society" in B Chandra and S Mahajan (ed.), *Composite Culture in a Multicultural Society,* Pearson Education and NBT Publication.

Social, Economic and Educational Status of the Muslim Community of India: A Report (2006) or the Sachar Committee Report.

Singh, A M (1981): "Development of Religious Identity and Prejudice in Indian Children" in Durganand Sinha (ed.), *The Socialism of the Indian Child* (New Delhi: Concept Publishing Company).

Staub, E (1996): "Cultural – Societal Roots of Violence: The Example of Genocidal Violence and of Contemporary Youth Violence in the United States", *American Psychologist,* Vol 51, pp 117-32.

– ஆதாரம் : ECONOMIC & POLITICAL WEEKLY
Vol - XLVII No. 20, May 19, 2012

# அரசுப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் குழந்தைகள் எந்த பள்ளியில் படிக்கின்றனர்? தகவல் உரிமை சட்டத்தில் தகவல்

– வே. புகழேந்தி

அரசுப்பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகள் 80 சதவீதம் பேர் தனியார் பள்ளிகளில் படிக்கின்றனர். தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல் வெளியாகி உள்ளதை அடுத்து கல்வித்துறை கலக்கத்தில் உள்ளது.

அரசு பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்றுபவர்கள், தனியார் பள்ளிகளில் படிப்பதன் மூலம் தங்கள் குழந்தைகள் மட்டும் நல்ல கல்வி அறிவு மற்றும் ஆங்கில மொழி புலமையுடன் வளர வேண்டும் என்றே ஆசைப்படுகின்றனர். பெரும்பாலான ஆசிரியர்களுக்கு பாடம் நடத்தவே தெரியவில்லை. பலருக்கு ஆங்கிலம் தெரியவில்லை. இதனால் அவர்களிடம் படிக்கும் மாணவர்களில் 1 முதல் 5ம் வகுப்புகளில் படிப்போருக்கு சாதாரண கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகள் போடத் தெரியவில்லை. எளிய ஆங்கில வாக்கியங்களை படிக்கத் தெரியவில்லை என்று 'அசர்' நிறுவனம் ஆண்டு வாரியாக சர்வே நடத்தி புள்ளி விவரங்களை வெளியிட்டு வருகிறது.

ஆனால், கல்வித் துறை அதை கண்டு கொண்டதாக தெரியவில்லை. மாறாக தரமாக ஆசிரியர்களை நியமிக்கிறோம் என்று களத்தில் இறங்கியுள்ளது. ஆனால் ஆசிரியர் தகுதித் தேர்வில் பல பேர் 100 மதிப்பெண்களை தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் எத்தனைபேர் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்த்துள்ளனர் என்ற கேள்விகளை முன்வைத்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி விவரம் கேட்டதில், 80 சதவீதம் ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்கவில்லை என்று தெரிய வந்துள்ளது. அடுத்த கட்டமாக, தொடக்க பள்ளிகளில் சர்வசிக்ஷா அபியான் திட்டம் எப்படி செயல்படுகிறது என்ற கேட்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு டிவி, 'ஹலோ இங்கிலீஷ்' என்ற ஆங்கிலம் கற்றுத்தரும் 20 மணி நேர பாடம் கொண்ட டிவிடி பிளேயர், ஆகியவை பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதை சொல்லித்தர எந்த ஆசிரியருக்கும் தெரியவில்லை என்ற உண்மை வெளி வந்துள்ளது.

இந்நிலையில், கடந்த அக்டோபர் மாதம் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த சந்திர சேகரன், தமிழக முதல்வருக்கு ஒரு மனு அனுப்பி உள்ளார். அதில் பள்ளிகளை தேர்ந்தெடுக்கும் முறை (School Choice Campaign) குறித்து தெரிவித்து இருந்தார். அதன்படி அரசு ஒவ்வொரு குழந்தையிடமும் படிப்புக்காக செலவிடும் பணத்தை கணக்கிட்டு ஒரு 'வவுச்சர்' கொடுத்துவிட வேண்டும். அந்த குழந்தையின் பெற்றோர் அந்த வவுச்சரை தங்களுக்கு பிடித்த பள்ளிகளில் கொடுத்துவிட்டு படிக்க வைப்பார்கள். அந்த பள்ளி சொல்லிக் கொடுப்பது சரியில்லை என்றால் வேறு பள்ளிக்கு அந்த வவுச்சரை எடுத்து சென்று விடுவார்கள். இதன் மூலம் சொல்லிக் கொடுப்பதில் பள்ளிகள் இடையே போட்டி வரும். அதனால் நல்ல கல்வி அளிக்க பள்ளிகள் முன்வரும். இந்த முறை பல நாடுகளில் உள்ளது. இது குறித்து கல்வித்துறை அதிகாரிகளுடன் ஆலோசிக்கலாம் என்று அந்த மனுவில் குறிப்பிட்டு இருந்தார்.

இது தமிழகத்தில் சாத்தியமாகுமா என்பது குறித்து கல்வி அதிகாரிகளிடம் கேட்டபோது, ''தமிழகத்தில் கல்வியின் நிலை எப்படி உள்ளது என்பது எங்களுக்கு தெரியும். கடந்த ஆட்சியில், பதிவு மூப்பு அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. இந்த முறை மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்தின்படி தகுதித் தேர்வு நடத்தி பணி நியமனம் வழங்குகிறோம். தனியார் பள்ளிகள் சமச்சீர் கல்வி பாடங்களை நடத்துவதே இல்லை. இதில் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. அரசு என்ன உத்தரவிடுகிறதோ அதை நாங்கள் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்'' என்று தெரிவித்தனர்.

**ஆதாரம்: தினகரன், 6.1.2013**

# இரண்டு லட்சம்

## பெண் குழந்தைகளைக் காணவில்லை!

– கல்யாண் குமார்

**கடந்த பத்தாண்டுகளில் இந்தியா முழுவதும் ஆறு வயதுக்குட்பட்ட 33 லட்சம் பெண் குழந்தைகள் காணாமல் போயிருக்கிறார்கள். தமிழகத்தில் மட்டும் இரண்டு லட்சம் பெண் குழந்தைகளைக் காணவில்லை**

‘உலகம் முழுக்க ஒரு வருடத்தில் இருபது லட்சம் பெண் குழந்தைகள் கடத்தப்பட்டு, பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இதில் ஐந்து லட்சம் குழந்தைகள் இந்தியக் குழந்தைகள்’ என்கிற அதிர்ச்சித் தகவலோடு ஆரம்பிக்கிறார் ஜெனிதா. இவர் இந்தியாவில் ஊட்டியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் Freedom Firm என்ற உலகம் தழுவிய அமைப்பின் பொறுப்பாளர். பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சிறுமிகளை மீட்டெடுத்து, அவர்களை பெற்றோருடன் சேர்த்து வைப்பது அல்லது கல்வி அறிவு கொடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பது இந்த அமைப்பின் முக்கிய நோக்கம்.

‘‘பாட்னா, புனே, டில்லி, நாக்பூர், சென்னை போன்ற இடங்களில் இதுமாதிரியான பாலியல் தொழில் விடுதிகள் இப்போது அதிக அளவில் இயங்குகின்றன. இதற்காகவே சில தரகர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக சிறுமிகளோடு பாலியல் உறவு வைத்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. 2007லிருந்து செயல்படும் எங்கள் அமைப்பின் மூலம் இதுவரை சுமார் 250 சிறுமிகள் மீட்டெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் தமிழகத்தைச் சேர்ந்த சிறுமிகளும் உண்டு’’ என்கிறார் ஜெனிதா.

பெரும்பாலும் ஏழ்மை நிலையில் இருக்கும் குழந்தைகள்தான் இதுபோன்ற கடத்தலுக்கும், பாலியல் கொடுமைகளுக்கும் ஆளாகிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்தவள் பன்னிரெண்டு வயதாகும் கலைச் செல்வி. அப்பாவின் திடீர் மறைவால் படிப்பை பாதியிலேயே நிறுத்த வேண்டிய நிலை. நோயாளியான அம்மாவுக்கும் வேலை பார்க்கத் தெம்பு இல்லாததால், சென்னையிலிருக்கும் தாய்மாமன், கலையை அடுத்த வருடம் பள்ளிக்கு அனுப்புவதாக ஆசை காட்டி, தன் வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அவரது மனைவி, இரண்டு பெண் குழந்தைகளின் துணிகளைத் துவைப்பது, வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்வது, கடைகளுக்குப் போவது என்று அவள் வயதுக்கும் உடம்புக்கும் மீறிய வேலைகளைச் செய்யச் சொல்லி வற்புறுத்தப்பட்டாள் கலை. ஒரு நாள் கடைக்குப் போன இடத்தில் தன்னிடம் மிகவும் வாஞ்சையோடு பேச்சுக் கொடுத்த ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணியிடம் தனது கஷ்டங்களை–யெல்லாம் சொல்லி அழுதாள் கலை.

தன்னோடு வந்தால் கலைக்கு நல்ல வேலை வாங்கித் தருவதாக மூளைச் சலவை செய்த அந்தப் பெண்மணியை நம்பி அன்றே அவரோடு போனாள் கலை. இரண்டு நாட்கள் ஏதோ ஒரு பகுதியில் அடைத்து வைக்கப்பட்ட கலை, அடுத்த நாள் மும்பைக்கு இரண்டு தடியர்களின் துணையோடு ரயிலேற்றப்படுகிறாள். யாருக்கும் சந்தேகம் வராமல் இருக்க, வழிமுழுக்க இருமல் மருந்து என்று போதை திரவத்தைக் குடிக்க வைத்து அவளை அரை மயக்கத்திலேயே கொண்டு போயிருக்கிறார்கள். ரெட் லைட் ஏரியாவில் இரண்டு வருடங்கள் பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தப்பட்டதோடு, போதை வஸ்துகளுக்கும் அவள் அடிமையாக்கப் பட்டிருக்கிறாள். ஒரு தனியார் தொண்டு நிறுவனத்தின் உதவியோடு அங்கே ரெய்டு நடந்தபோது 14 வயதாகி இருக்கும் கலையும் மீட்கப்பட்டு சென்னைக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறாள். அந்தத் தொண்டு நிறுவனம் மருத்துவ சிகிச்சைகள் எல்லாம்

“ஏழ்மை நிலையில் இருக்கும் குழந்தைகள்தான் இதுபோன்ற கடத்தலுக்கும், பாலியல் கொடுமைகளுக்கும் ஆளாகிறார்கள்”

கொடுத்தும் போதைப் பழக்கத்திலிருந்து மட்டும் அவளை மீட்க முடியவில்லை. அவள் சொன்ன விவரங்களை வைத்துக் கொண்டு அவளது அம்மாவைப் பல இடங்களில் தேடிப்பார்த்தும் அவர் கிடைக்கவில்லை. தற்போது போதைப் பழக்கத்திலிருந்து விடுபட, சிறப்புச் சிகிச்சைக்காக புனேவிலிருக்கும் ஒரு சேவை இல்லத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறாள்.

''இந்தியாவில் 80 சதவிகிதப் பெண் குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள். இதற்குப் பெற்றோர்களின் கவனக்குறைவே காரணம். தெரியாத வெளி ஆட்களிடமிருந்து தங்கள் குழந்தைகளைக் காப்பதற்காக தங்களுக்கு நன்கு தெரிந்த உறவினர்கள், நண்பர்கள், அண்டை வீட்டார் வசம் பெண் குழந்தைகளை கவனித்துக் கொள்ளச் சொல்லி ஒப்படைத்துவிட்டுப் போகிறார்கள். அவர்களில் சிலர்தான் இதுமாதிரியான வக்கிரமான செயல்களில் ஈடுபடுகிறார்கள்'' என்று ஓர் ஆய்வறிக்கையைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார் மனநல நிபுணர் டாக்டர். திருநாவுக்கரசு.

பாலியல் வக்கிரங்களுக்காக மட்டுமல்ல, பிச்சை எடுக்கும் 'தொழிலில்' ஈடுபடுத்தவும் பெண் குழந்தைகள் விலை கொடுத்து வாங்கப்படுவதும் இப்போது அதிகரித்து வருகிறது. சமீபத்தில் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த செல்வி என்ற பெண்மணி, ஏற்கெனவே தனக்கு ஒரு பெண் குழந்தை இருப்பதால், நவம்பர் 12ம் தேதி தனக்குப் பிறந்த பெண் குழந்தையை, ஆயிரம் ரூபாய்க்கு விலை பேசி, நூறு ரூபாய் அட்வான்ஸாக பெற்றுக்கொண்டு மூலக்கடையைச் சேர்ந்த முனியம்மா என்ற பெண்ணிடம் விற்ற கொடுமையும் நடந்திருக்கிறது. அதை வாங்கிய முனியம்மா, கோயம்பேடு பஸ் நிலையத்தில் அந்தக் குழந்தையைக் காட்டி பிச்சையெடுத்தபோது சந்தேகத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார். பிச்சையெடுக்க வைக்க அந்தக் குழந்தையை வாங்கியதையும் அவர் ஒப்புக்கொண்டதையடுத்து செல்வியும் முனியம்மாவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். குழந்தை, ஷெனாய் நகரில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைப் பேறின்மையும் குழந்தைகள் வாங்கப்படுவதற்கு ஒரு காரணம். சென்னை எழும்பூர் மருத்துவமனையில் இரவெல்லாம் அழுதுகொண்டிருந்த மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டிருந்த பச்சிளம் குழந்தைக்குப் பால் கொடுத்து சமாதானப்படுத்துமாறு அதன் தாய் வற்புறுத்தப்பட்டார். ஆனால், குழந்தை அப்படிக்கதறிக் கொண்டிருக்கும்போது கூட பால் கொடுக்கத் தயங்கினார் அந்தப் பெண். சந்தேகப்பட்டு விசாரித்தபோது நவம்பர் மாதம் 6ம் தேதி பத்தாயிரம் ரூபாய் கொடுத்து அந்தக் குழந்தையை அவர் இன்னொருவரிடம் வாங்கியது தெரியவந்துள்ளது. இதுகுறித்து இப்போது அந்தக் குழந்தை கைமாறிய ஐந்து பேரிடம் விசாரணை நடந்து வருகிறது.

குழந்தைகளை விற்பது, வாங்குவது மட்டுமல்ல திருடவும்படுகின்றன. குழந்தையில்லாத சில பெண்கள் அதுமாதிரி திருட்டுகளில் ஈடுபடுகிறார்கள் என்பதுதான் அதிர்ச்சியூட்டும் செய்தி. தாய்மை அடையத் தாமதமாகும் பெண்களை நாம் மனரீதியாகக் காயப்படுத்தி, அந்த நிலைக்கு அவர்களைத் துரத்துகிறோம் என்பதால் நாமும் ஒருவகையில் இதற்குக் காரணம்தான். தனியார் தொலைக்காட்சிகளில் செய்தி வாசிப்பாளராக நீங்கள் அறிந்திருக்கக் கூடிய அசோக் ரத்தினம், தான் வாசித்த செய்தி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, 'பொய்க்குடம்' என்று ஒரு குறும்படம் தயாரித்திருக்கிறார்.

''தாய்மை அடைய தாமதமாகும் பெண்களை யாரும் காயப்படுத்தாதீர்கள் என்ற கருத்தை வலியுறுத்தவே, 'பொய்க்குடம்' என்ற இந்தக் குறும்படத்தை எடுத்தேன்'' என்கிறார் அசோக் ரத்தினம்

நாமக்கல்லைச் சேர்ந்த ஒரு பெண் தனக்கு குழந்தைப் பேறு இல்லாத வருத்தத்தில் இருந்திருக்கிறார். உறவினர்கள் இவரை பல விதத்திலும் மனதை வருத்தி இருக்கிறார்கள். குழந்தையின்மையைக் காரணம் காட்டி, அவரது கணவருக்கு இரண்டாம் திருமணத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தனக்கு ஏற்பட்ட குறையை மறைக்கவும் தன் அன்புக் கணவனை விட்டுக்கொடுக்க மனமில்லாமலும், தான் கர்ப்பமடைந்திருப்பதாக அனைவரையும் நம்ப வைத்திருக்கிறார். பிரசவத்திற்கான நாள் நெருங்க நெருங்க ஒருவித தவிப்பிலேயே இருந்தவர். ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கிருக்கும் பிறந்த குழந்தை ஒன்றை திருடப் போனபோது கையும் களவுமாகப் பிடிபட்டு பொது மக்களிடம் அடிபட்டிருக்கிறார். 'உறவினர்களின் கொடுமையான வார்த்தைகளே என்னை இந்தக் காரியம் செய்யத் தூண்டியது' என்று அழுதிருக்கிறார் அந்தப் பெண்மணி. இந்தச் சம்பவத்தையே தன் 'பொய்க்குடம்' என்ற குறும்படத்திற்கான மையக் கருத்தாகக் கொண்டிருக்கிறார் அசோக் ரத்தினம். ''அவரது திருட்டுக்குக் காரணம், அந்தப் பெண்ணின் உறவினர்கள் அவரை நடத்திய விதம்தான். அதனால், தாய்மை அடைய தாமதமாகும் பெண்களை யாரும் காயப்படுத்தாதீர்கள் என்ற கருத்தை வலியுறுத்தவே, நானே அறுபதாயிரம் ரூபாய் செலவு செய்து, 'பொய்க்குடம்' என்ற இந்தக் குறும்படத்தை எடுத்தேன்'' என்கிறார் அசோக் ரத்தினம்.
''பிறந்த சிறு குழந்தைகளின் நிலைமை இப்படியென்றால், கருவிலேயே அது பெண் குழந்தை என்றால்

கலைத்துவிடும் அவலமும் கடந்த பத்து ஆண்டுகளில் மிக அதிக அளவில் அதிகரித்திருக்கிறது'' என்கிறார். CASSA (Campaign against sex selective abortion) என்ற அமைப்பின் மையக்குழு உறுப்பினர் ஜீவா. ''மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து நாங்கள் நடத்திய ஆய்வில், கடந்த பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் இயற்கையின் நியதிப்படி 1,000 ஆண் குழந்தைகளுக்கு 952 பெண் குழந்தைகள் பிறக்க வேண்டும். ஆனால், 17 மாவட்டங்களில் 952க்கும் குறைவான பெண் குழந்தைகளே உள்ளன'' என்கிறார்.

''பெண் குழந்தைகளை கருவில் கொலை செய்வதோடு, ஒரு வயதுக்குள் இறக்கும் பெண் குழந்தைகள் மற்றும் காணாமல் போகும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. இந்த அடிப்படையில் தமிழகத்தில் மட்டும் சுமார் 2 லட்சம் குழந்தைகள் காணாமல் போயிருக்கிறார்கள். இந்திய அளவில் இது 33 லட்சமாக உயர்ந்திருக்கிறது'' என்கிறார் ஜீவா.

பெண் குழந்தைகளுக்கெதிரான குற்றச் செயல்களைத் தடுக்க, அரசு சார்பில் எந்த விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

''பிச்சையெடுக்க தங்கள் பெண் குழந்தைகளையே ஈடுபடுத்தும் அம்மாவையோ, அப்பாவையோ அதற்கென உருவாக்கப்பட்ட யூனிஃபார்ம் அணியாத போலீஸ் படை (J.A.P.U.) பிடித்துக் கொண்டு எங்களிடம் வருவார்கள். அந்தப் பெற்றோருக்கு கவுன்சலிங் கொடுத்து, பிள்ளைகளை நாங்கள் படிக்க வைக்கிறோம் என்ற உறுதி மொழி கொடுத்து அந்தச் சிறுமிகளை தமிழக அரசே நடத்தும் புரசைவாக்கத்தில் இருக்கும் குழந்தைகள் நலக் குழும இல்லத்தில் (C.W.C) சேர்த்து கவனித்துக் கொள்கிறோம். அவர்களுக்கு படிப்போடு தொழில் கல்வியும் கற்றுக் கொடுத்து, வேலையும் வாங்கிக் கொடுத்து வருகிறோம். சில தனியார் நிறுவனங்களும் எங்களுக்கு உதவுவதால் இங்கிருந்து போன இரண்டு குழந்தைகள், தற்போது மருத்துவம் மற்றும் விஸ்காம் படிப்பில் சேர்ந்திருக்கிறார்கள்'' என்கிறார், இந்தக் குழந்தைகள் நலக் குழுமத்தின் தலைவர் ஆக்னஸ் சாந்தி. இவர் ஒரு மனநல ஆலோசகரும் கூட.

''பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும் எங்கள் குழுமத்தில் பராமரிக்கப்படுகிறார்கள். தங்களின் பெற்றோர், ஊர் குறித்த விவரங்களைச் சரியாகச் சொல்ல முடியாதபோது அவர்கள் கூறும் ஏதாவது சின்னத் தகவல்களையாவது பெற்று, கூகுள் மேப் மூலமாகவும் இந்தியா முழுக்க இருக்கும் ஃபேஸ்புக் நண்பர்கள் மூலமாகவும் முயற்சித்து, அவர்களைப் பெற்றோரிடம் சேர்த்து வைக்கிறோம்'' என்கிறார், ஆக்னஸ் சாந்தி.

**நாம் என்ன செய்ய முடியும் ?**

ஏதாவது பொருள் வாங்கவோ அல்லது பள்ளிக்கோ செல்லும் சிறு குழந்தைகளுக்கு அவர்கள் வீட்டு விலாசத்தையோ, செல்போன் நம்பரையோ மனப்பாடம் செய்வித்தோ அல்லது அதை அவர்களது பாக்கெட்டில் எழுதி வைப்பதையோ பெற்றோர்கள் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் வழி தெரியாமல் தவிக்கும் சில குழந்தைகள், உடனடியாக பெற்றோரைச் சேரும் வாய்ப்புகள் அதிகமிருக்கின்றன.

''ஏழ்மை நிலையின் காரணமாக வீட்டு வேலைகளுக்கு தங்கள் குழந்தைகளை அனுப்பும் பெற்றோர், அழைத்துச் செல்பவர்கள் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொண்டு அனுப்ப வேண்டும். மாதம் ஒரு முறையாவது அந்தச் சிறுமியைச் சந்தித்து, அவளுக்கு இருக்கும் சங்கடங்களை வெளிப்படையாகப் பேசச் சொல்லி கேட்க வேண்டும்'' என்று அறிவுறுத்துகிறார். Freedom Firm அமைப்பின் பொறுப்பாளர் ஜெனிதா.

''மீடியாக்களும் குழந்தைகள் காணாமல் போவதை கட்டணமில்லாத ஒரு சேவையாகவே எடுத்துக்கொண்டு அதுகுறித்த தகவல்களை உடனுக்குடன் இலவசமாக வெளியிட வேண்டும். அதன் மூலம் பல குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் சேர நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒரு சம்பவம்: ''வழக்கு எண் 18/9'' என்ற படத்தில் எங்களது கட்டுப்பாட்டில் இருக்கும் பால மந்திர் இல்லத்தில் படப்பிடிப்பு நடந்திருக்கிறது. அதில் காட்டப்பட்ட ஒரு குழந்தையை படத்தில் பார்த்த ஈரோட்டைச் சேர்ந்த ஒரு தம்பதி, அது சில வருடங்களுக்கு முன் காணாமல் போன எங்களது குழந்தை என்று தேடி இங்கே வந்தார்கள். தகுந்த ஆதாரங்களை சரிபார்த்த பின்னர், அந்தக் குழந்தையை அதன் பெற்றோரிடம் ஒப்படைத்தோம்'' என்கிறார். குழந்தைகள் நலக் குழுமத்தின் கமிட்டி உறுப்பினராகவும் பரிசு டிரஸ்ட் என்ற அமைப்பின் மூலம் குழந்தைகளுக்கான கல்வி அமைப்பை நடத்தும் ஷீலா சார்லஸ் மோகன்.

பெண் குழந்தைகளின் புன்னகையைத் திருடி, அதற்கும்கூட ஒரு விலையை நிர்ணயிக்கும் கல் நெஞ்சுக்காரர்களை மன்னிக்கவே கூடாது. கடுமையான தண்டனைகள் வேண்டும்.

**– ஆதாரம்: புதிய தலைமுறை • 20 டிசம்பர் 2012**

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – அனைத்து வகை அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கான பொதுவான சட்டம் மற்றும் விதிகளை வகுப்பதற்கு ஆலோசனை வழங்க வல்லுநர் குழு (Expert Committee) அமைத்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

### பள்ளிக் கல்வித் துறை

அரசாணை (1டி) எண். 258

நாள்: 04.07.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
ஆனி. 20
படிக்கப்பட்டவை:

பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் எண். 11574/ஜி2/இ2/2007 நாள்: 21.05.2012

------

**ஆணை:**

2012–2013–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறையின் மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக்கல்வி) அவர்கள் சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> ‘‘தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகளை ஒழுங்குப்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தும்) சட்டம் 1973 மற்றும் அதன் கீழ் அமையப்பெற்ற விதிகள் 1974, தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்கும் விதித்தொகுப்பு, மெட்ரிகுலேசன் பள்ளிகள் முறைப்படுத்தும் விதிகள், மழலையர் மற்றும் துவக்கப் பள்ளிகளுக்கான விதிகள், ஆங்கிலோ இந்திய பள்ளிகளுக்கான விதிகள் ஆகியவை பின்பற்றப்படுகின்றன. தற்போது அனைத்து வகை பள்ளிகளிலும் ஒரே மாதிரியான பாட திட்டம் பின்பற்றப்படுவதாலும், தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள் 2011 நடைமுறைப்படுத்தப்படுவதாலும், மேற்காண் சட்டம் மற்றும் விதிகளை ஆய்வு செய்து, தனியார் பள்ளிகளுக்கானப் பொதுவான சட்டம் மற்றும் விதிகளை வகுப்பதற்கு ஆலோசனை வழங்க வல்லுநர் குழு அமைக்கப்படும்’’

2. தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகளை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்தும்) சட்டம் 1973 மற்றும் அதன்கீழ் அமையப்பெற்ற தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்தும்) விதிகள் 1974, தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்கும் விதித்தொகுப்பு, மெட்ரிகுலேசன் பள்ளிகள் முறைப்படுத்தும் விதித்தொகுப்பு, மழலையர் மற்றும் துவக்கப் பள்ளிகளுக்கான விதித்தொகுப்பு, ஆங்கிலோ இந்திய பள்ளிகளுக்கான விதித்தொகுப்பு ஆகியன பின்பற்றப்படுகின்றன. தற்போது தமிழ்நாடு சமச்சீர் கல்விச் சட்டம் 2010 இயற்றப்பட்டு அதன் அடிப்படையில் அனைத்து வகை பள்ளிகளிலும் ஒரே மாதிரியான பாட திட்டம் பின்பற்றப்படுவதாலும், தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள் 2011 நடைமுறைப்படுத்தப்படுவதாலும் மேற்காண் சட்டம் மற்றும் விதிகளை ஆய்வு செய்து, அனைத்து வகை அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் வகையில் புதிய சட்டம் மற்றும் விதிகளை ஏற்படுத்திட ஆலோசனை வழங்கிட 2012–13ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் வல்லுநர் குழு அமைக்கப்பட வேண்டும்.

3. மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் அனைத்து வகை அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் வண்ணம் சட்டம் மற்றும் விதிகளை உருவாக்குவது குறித்து ஆலோசனை வழங்கவும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் சார்பில் கொள்கை முடிவெடுத்தல் சார்ந்த பணி ஆகியவற்றை மேற்கொள்ள

ஏதுவாக ஆலோசனை வழங்கவும் வல்லுநர் குழு (Expert Committee) அமைத்திடலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் பள்ளிக் கல்வித்துறை மானிய கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட "அனைத்து வகை அங்கீகரிக்கப்பட்டத் தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் வண்ணம் புதிய சட்டம் மற்றும் விதிகளை உருவாக்க வல்லுநர் குழு அமைத்தல்" தொடர்பான அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டு வல்லுநர் குழு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர். பழனியாண்டி, இந்திய ஆட்சிப்பணி அலுவலர் (ஓய்வு), 45-A இரண்டாவது தெரு, குமரன் நகர் விரிவாக்கம், மடிப்பாக்கம், சென்னை – 600 091 | தலைவர் |
| 2. | துணை / இணைச் செயலாளர், (சட்டம்) பள்ளிக் கல்வித்துறை | உறுப்பினர் |
| 3. | நிதி கட்டுப்பாட்டு அலுவலர் (Financial Controller), பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை | உறுப்பினர் |
| 4. | பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி) | உறுப்பினர் |
| 5. | பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) | உறுப்பினர் செயலாளர் |
| 6. | தொடக்கக் கல்வி இணை இயக்குநர் (உதவி பெறும் பள்ளிகள்) | உறுப்பினர் |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இணை இயக்குநர் | உறுப்பினர் |
| 8. | சட்ட அலுவலர், பள்ளிக் கல்வி இயக்ககம் | உறுப்பினர் |
| 9. | தொடக்கக் கல்வி துணை இயக்குநர் (சட்டம்) | உறுப்பினர் |
| 10. | திரு. லட்சுமிகாந்தன் (முதன்மைக் கல்வி அலுவலர் – ஓய்வு) | உறுப்பினர் |
| 11. | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் – சென்னை | உறுப்பினர் |
| 12. | ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆய்வாளர் – சென்னை | உறுப்பினர் |
| 13. | திரு.வி. சந்திரசேகரன், நிர்வாகி, ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஊத்தங்கரை, கிருட்ணகிரி | உறுப்பினர் |
| 14. | திரு. S.K. தணிகாசலம், செயலர், Dr. RSM மகளிர் மேல்நிலைப் பள்ளி, முத்தியால்பேட்டை, சென்னை | உறுப்பினர் |
| 15. | திருமதி. ஆக்ஸீலியா பீட்டர், பிளாட் எண்.1, ராம்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், 26, தெற்கு மாட வீதி, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. | உறுப்பினர் |

5. இக்குழு மேற்காணும் பொருள் குறித்து ஆராய்ந்து தமது அறிக்கையினை ஆறு மாத காலத்திற்குள் அரசுக்கு சமர்பிக்கப்பட வேண்டும் என்று அறிவிறுத்தப்படுகிறது.

6. இக்குழு முதல் நிலைக் குழுவாக கருதப்பட வேண்டும். இக்குழுவின் அரசு அலுவலரல்லாத உறுப்பினர்கள் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது அதற்கான அமர்வுப்படிகளை பெறத்தகுதியுடையவர்கள் ஆவர்.

7. வல்லுநர் குழுவின் செயல்பாடுகள் தொடர்பான செலவினங்கள் அனைத்தும் பள்ளிக் கல்வி இயக்கத்தால் மேற்கொள்ளப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்,

**பெறுநர்**
திரு. ஆர். பழனியாண்டி, இந்திய ஆட்சிப்பணி அலுவலர் (ஓய்வு)
45–A, இரண்டாவது தெரு, குமரன் நகர் விரிவாக்கம், மடிப்பாக்கம்,
சென்னை – 600 091 (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை – 6
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை 6
பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி)

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)
தொடக்கக் கல்வி இணை இயக்குநர் உதவி பெறும் பள்ளிகள்
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இணை இயக்குநர்
சட்ட அலுவலர், பள்ளிக் கல்வி இயக்ககம்
தொடக்கக்கல்வி துணை இயக்குநர் (சட்டம்)
திரு. லட்சுமிகாந்தன் (முதன்மைக் கல்வி அலுவலர் – ஓய்வு)
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வாளர் – சென்னை
ஆங்கிலோ இந்தியன் பள்ளி ஆய்வாளர் – சென்னை
திரு. வி. சந்திரசேகரன், நிர்வாகி, ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஊத்தங்கரை, கிருட்ணகிரி (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
திரு. S.K. தணிகாசலம், செயலர், Dr. RSM மகளிர் மேல்நிலைப் பள்ளி, முத்தியால்பேட்டை, சென்னை –1 (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
திருமதி. ஆக்ஸீலியா பீட்டர், பிளாட் எண்.1, ராம்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், 26, தெற்கு மாடவீதி, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை – 15.
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>
பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர் சென்னை – 9
நிதித்துறை முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை 9
சட்டத்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை 9
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## ஊட்டச்சத்து குறைவால்24,000 குழந்தைகள் உயிரிழந்த கொடுமை

மகாராஷ்டிராவில் கடந்த ஆண்டில் 24 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் உயிரிழந்திருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. மகாராஷ்டிராவில் ஆதிவாசிகள் மற்றும் பழங்குடியின மக்கள் அதிகளவில் வசிக்கும் தானே, நாசிக் மற்றும் கட்சிரோலி மாவட்டங்களில் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் உயிரிழந்து வருகின்றனர். இதனால் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குாந்தைகளை காப்பாற்ற மேற்கண்ட மாவட்டங்களில் அரசு அங்கன்வாடிகளை திறந்து வருகிறது. இந்த அங்கன்வாடிகள் மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

ஆனாலும் குழந்தைகளின் இறப்பை தடுக்க முடியவில்லை. ஆதிவாசி குழந்தைகளுக்காக அறிவிக்கப்படும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டும் கூட அது சரியாக பாதிக்கப்பட்டவர்களை சென்றடைவதில்லை. இப்பிரச்சனை குறித்து நேற்று சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் பிரச்னை கிளப்பினர். இதையடுத்து இப்பிரச்னை குறித்து அரசு அறிக்கை ஒன்றை பேரவையில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், ‘‘கடந்த ஒரு ஆண்டில் மட்டும் ஊட்டச்சத்து குறைவால் மாநிலம் முழுவதும் 24 ஆயிரம் குழந்தைகள் உயிரிழந்திருக்கின்றன. 10 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 1.24 லட்சம் குழந்தைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளனர்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாக கருதப்படும் மகாராஷ்டிராவில் ஒரே ஆண்டில் 24 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் உயிரிழந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த இறப்புகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர். நாட்டில் 42 சதவீத குழந்தைகள் குறிப்பாக 5 வயதுக்கு குறைவான குழந்தைகள் குறைந்த எடையுடன் இருப்பதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கும் ஆழ்ந்த கவலை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

– **ஆதாரம்:** தினகரன், 12.7.2012

# இதுவும் கடந்துபோகுமோ?

– டி.எல். சஞ்சீவிகுமார், கே.கே.மகேஷ்

**தனியார் பள்ளிப் பேருந்தில் ஓட்டை வழியே கீழே விழுந்து உயிர் துறந்த ஸ்ருதியின் மரணத்தைத் தொடர்ந்து தனியார் பள்ளிகளுக்கு ஏகப்பட்ட சட்டதிட்டங்கள் விதிக்கும் அரசாங்கம், தன்னால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளை எந்த லட்சணத்தில் பராமரிக்கிறது?**

விருதுநகர் அருகே நந்திரெட்டியபட்டி அங்கன்வாடி மையத்தில் கடந்த ஆண்டு எண்ணெய்ச் சட்டியில் விழுந்து நான்கு வயதுக் குழந்தை பாலாமணி இறந்து போனாள். சிவகங்கை மாவட்டம், இடையன்வலசை கிராமத்தில் யுவன்ஸ்ரீ, தருண் அஜய் ஆகிய குழந்தைகள் கழிவுநீர்த் தொட்டியில் விழுந்து மூச்சுத் திணறி இறந்துபோனார்கள். வாடிப்பட்டி அருகே அய்யங்கோட்டை அரசுப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு மாணவி ஹேமலதா, பள்ளியில் கழிப்பறை இல்லாததால், சிறுநீர்த் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தாள். சென்னையில் அரசுப் பேருந்தில் பயணித்த நான்கு மாணவர்கள் லாரியால் நசுக்கப்பட்டு இறந்தார்கள். திருவள்ளூர் மாவட்டம், நல்லூர்காந்தி நகரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குள் தறிகெட்டு ஓடிய வாகனம் மோதியதில் இரண்டாம் வகுப்பு மாணவன் வினோத் இறந்துபோனான்.

இவையும் இன்னபிறவுமாகச் செய்தித்தாள்களின் இடுக்குகளில் இடம் பிடிக்கும் இப்படியான செய்திகளை வாசிக்கக்கூட மறுத்துவிடுகிறோம். தமிழகத்தில் பள்ளி மாணவர்கள் திடீர் விபத்துகளில் பாதிக்கப்படுவதோ மரணத்தைத் தழுவாத நாட்களோ கிட்டத்தட்ட இல்லை எனலாம்.

தமிழகத்தில் உள்ள மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை 51,529. அவற்றில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடி. இதில் 34,532 பள்ளிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள். இங்கு படிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 70 லட்சம். ஆக, சுமார் 30 லட்சம் குழந்தைகள் படிக்கும் தனியார் பள்ளிகளுக்கு ஏராளமான பாதுகாப்பு விதிமுறைகளை வகுக்கும் அரசு இயந்திரம், தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் படிக்கும் சுமார் 70 லட்சம் குழந்தைகளின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம் கொடுத்து இருக்கிறது? மாணவர்களுக்கான போக்குவரத்தில் தொடங்கி வகுப்பறை, கழிப்பறை என அனைத்து அம்சங்களிலும் சீர்கேடுகள். பஸ் பாஸ் இருக்கிறது. ஆனால், போதுமான பேருந்துகள் இல்லை. பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பான பயணத்துக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்து இருக்கிறார். 'பங்கேற்புக் கல்விக்கான ஆதார மையம்' அமைப்பின் இயக்குநர் ஜான் தேவாரம். இதுதொடர்பாக நீதிமன்றம் விளக்கம் கேட்டும் அரசிடம் இருந்து இதுவரை பதில் இல்லை.

''அரசுப் பள்ளிகளில் கழிப்பறை, குடிநீர் வசதிகளை மேம்படுத்த நபார்டு வங்கி, தமிழக அரசுக்கு 126 கோடி ரூபாய் வழங்கி இருக்கிறது. ஆனால், இப்போதும் பல பள்ளிகளில் கழிப்பறைகளே இல்லை. தமிழக அரசின் தொலை நோக்குத் திட்டமான, 'விஷன் 2023'ல் மற்ற துறைகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் பள்ளிக் கல்வித்துறைக்கு அளிக்கப்படவில்லை. அனைவருக்கும் கல்வித் திட்டம் வந்த பிறகும் தமிழகத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான எந்த முன்னெடுப்புகளும் இல்லை. கடந்த 2010–11 கல்வி ஆண்டில் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 283 பள்ளிகளுக்கு இன்றும் தலைமை ஆசிரியர்கள் இல்லை.

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயணிக்கும் குழந்தைகளுக்கு எனக் கூடுதல் பஸ் வசதி ஏற்படுத்தித் தருவது ஓர் அரசின் தலையாய கடமை. ஆனால், அதில் கூடப் பாராமுகம் காட்டுகிறது தமிழக அரசு. திருச்சுழி கமுதி ரோட்டில் உள்ள பள்ளிகளையும் சுற்றுவட்டார கிராமங்களையும் மையமாகக்கொண்டு ஒரு கணக்கெடுப்பு நடத்தினோம். அதன்படி, அந்தப் பகுதிகளில் பஸ் பாஸ் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 25 ஆயிரம். ஆனால், அந்த வழித்தடங்களில் ஒரு நாள் முழுக்க இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 72 மட்டுமே. அதிலும் பள்ளி செல்லும், வீடு திரும்பும் காலை, மாலை நேரங்களில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை 30 மட்டுமே. வெறும் 30 பேருந்துகளில் 25 ஆயிரம் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும்; அவர்களுடன் பொதுமக்களும் பயனிக்க வேண்டும் என்பது எவ்வளவு பெரிய அநீதி. வணிக நோக்கில் செயல்படும் வியாபாரிகள் அடிமாடுகளைக்கூட இதைவிட வசதியாகத்தான் பயணிக்க வைப்பார்கள்.

சென்னையில் மாணவி ஸ்ருதி பலியான பின்பே தனியார் பள்ளி வாகனங்களை ஆய்வுக்கு உட்படுத்தியது அரசு.

ஆனால், அந்த ஆய்வு அரசுப் பள்ளி மாணவர்கள் பயணிக்கும் அரசுப் பேருந்துகளுக்குத் தேவை இல்லையா?'' என்கிற ஜான் தேவாரத்தின் கேள்வியில் ஆதங்கத்தைத் தாண்டி தொனிக்கிறது ஆவேசம்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட இலவசக் கட்டாயக் கல்வி சட்டத்தின்படி, 2013ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் அனைத்து மாநில அரசுகளும் தங்கள் பள்ளிகளில் உள்கட்டமைப்பு, கழிப்பறை, குடிநீர், ஆசிரியர் நியமனம் என அனைத்து வசதிகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால், தமிழகத்தில் எதுவுமே நிறைவேற்றப்படாததால், தேசியக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் சென்னையில் கடந்த அக்டோபர் மாதம் பொது விசாரணையை நடத்தியது. அந்தப் பொது விசாரணையில் தமிழகத்தின் 10 மாவட்டங்களைச் சேர்ந்த 250 பஞ்சாயத்துகளில் இருந்து 57 பள்ளிகளின் பிரதிநிதிகள் பங்கு கொண்டார்கள். விசாரணை நடுவர்களில் ஒருவரான கல்வியாளர் வசந்தி தேவி அந்த விசாரணையில் தெரிய வந்த சில அதிர்ச்சியான செய்திகளைப் பகிர்ந்துகொண்டார்.

''கட்டாய இலவசக் கல்விச் சட்டத்தின்படி ஒவ்வொரு பள்ளிக்கும் உள்ளாட்சி அமைப்பு மற்றும் சமூகப் பிரதிநிதிகள் கொண்ட பள்ளி நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஆனால், தமிழகத்தில் ஒரு பள்ளியில்கூட இந்தக் குழு அமைக்கப்படவே இல்லை. அதே சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு 25 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். ஆனால், தமிழகத்தில் இதற்கான அறிகுறியையே காணோம். இதுகுறித்து விளக்கம் கேட்டபோது, மெட்ரிக் பள்ளிகளின் இயக்குநர், 'குழந்தைகள் சேர்க்கை மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளது. கட்டணம் வசூலிக்கப்பட்டது' என்று கூறினார். என்ன விட்டேத்தியான பதில் இது. அந்தச் சட்டத்தின் நோக்கமே குழந்தைகளுக்குக் கட்டணம் இல்லாமல் கல்வியை உறுதி செய்யும் சட்டம்தான். ஆனால், அமல்படுத்த வேண்டிய அரசு இயந்திரமோ தனியார் பள்ளிகளைப் பாதுகாப்பதில் முனைப்பாக இருக்கிறது!'' என்றார் காட்டமாக.

மக்கள் கண்காணிப்பகம் அமைப்பின் கணேசன், ''தமிழகத்தில் 46 சதவிகிதம் பள்ளிகளில் கழிப்பறைகள் இல்லை. கழிப்பறை இருக்கும் பள்ளிகளிலும் அவை பராமரிப்பின்றி இருக்கின்றன. சில பள்ளிகளில் 300 பேருக்கு ஒரு கழிப்பறை இருக்கிறது. மாணவர்கள் பள்ளிக்கு வெளியே சென்று அவஸ்தை தீர்க்க, மாணவிகளின் நிலையோ கொடுமையானது. சிறுநீர் வருவதைக் கட்டுப்படுத்த பள்ளியில் இருக்கும் நேரங்களில் அவர்கள் தண்ணீரே குடிப்பது இல்லை. ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் சுமார் 500 பணியாளர்கள் தட்டுப்பாடு இருப்பதாக அரசு அதிகாரிகளே கூறுகிறார்கள். 2013 ஏப்ரலுக்குள் இலவசக் கட்டாயக் கல்விச் சட்டத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், அதற்கான அறிகுறிகளே தமிழகத்தில் காணவில்லை என்பதே உண்மை!'' என்று குமுறுகிறார்.

வழக்கறிஞர் கனகவேல் பஸ் பாஸ்களில் பயணிக்கும் மாணவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களைக் கூறுகிறார். ''தமிழகத்தில் 67 சதவிகிதப் பள்ளி மாணவர்கள் பொது வாகனங்கள் மூலமாகத் தான் பள்ளிகளுக்குச் செல்கிறார்கள். அவர்களின் போக்குவரத்து வசதிக்காக தமிழக அரசு சுமார் 303.84 கோடி ரூபாயை அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு வழங்கியிருக்கிறது. அந்தத் தொகை முழுவதும் பஸ் பாஸ் மூலம் பயணிக்கும் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்ட தொகை ஆகும். ஆனால், யதார்த்தத்தில் பஸ் பாஸ் மூலம் பயணிக்கும் மாணவர்களை அரசுப் பேருந்து நடத்துநர்கள் மிகவும் கேவலமாக நடத்துகிறார்கள். 'ஓசியிலதானே வர்றே... உக்காந்துதான் வருவியோ' என்று திட்டுவதில் தொடங்கி, பள்ளி மாணவர்கள் குவிந்திருக்கும் நிறுத்தங்களில் பேருந்துகளை நிறுத்தாமல் செல்வது வரை அனைத்து வன்முறைகளும் அரங்கேறுகின்றன. தனியார் பள்ளி வாகனங்களில் பயணிக்கும் மாணவர்களுக்கு இருக்கும் அதே உரிமை பஸ் பாஸில் பயணிக்கும் குழந்தைகளுக்கும் இருக்கிறது. இது தொடர்பாக, நாங்கள் தொடர்ந்த வழக்குக்கு இது வரை அரசாங்கத்திடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை!'' என்கிறார் காரமாக.

இந்தக் குறைகள் மற்றும் நிலைமை குறித்து பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் தேவராஜனிடம் கேட்டோம். ''நீங்கள் சொல்லும் அத்தனைக் குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டுவருகின்றன. இலவசக் கட்டாயக் கல்விச் சட்டப்படி ஏப்ரல் மாதத்துக்குள் அடிப்படை வசதிகள் அனைத்தையும் நிறைவேற்ற அசுர வேகத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கழிப்பறைகள் இல்லாத பள்ளிகளுக்கு கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. சுத்தமான குடிநீர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளோம். கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். ஏப்ரல் மாதத்துக்குள் அனைத்து வசதிகளையும் நிறைவேற்றிவிடுவோம்'' என்றார்.

கல்விக் கண் திறக்க வேண்டிய அரசாங்கம், தன் துயில் கலைந்து துரித நடவடிக்கையில் இறங்க வேண்டிய தருணம் இது!

**– ஆதாரம்: ஆனந்தவிகடன், 16.1.2013**



Massimiliano Palma

நலிந்த பிரிவினரின் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் – பாதுகாப்பான குடியிருப்பு மற்றும் வாழ்வாதாரம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

*Courtesy*: HAQ: Centre for Child Rights – Calender 2013




*Courtesy :* Mapping Save the Children's Response to Violence against Children in South Asia Region

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**
*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*